பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 17 வெள்ளிக்கிழமை 30.04.2021 கதிர் 176

**இனி இது ரகசியம் அல்ல!**

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரையானஎழுச்சிப் பேரணி செயற்படைக்கு எதிராக பொலிஸார் எடுத்து வரும் சட்ட நடவடிக்கைக்கு தற்காலிகமான ஆப்பு வைக்கப்பட்டிருக்கின்றது.

பக்கம்02

## புத்தாண்டு கொண்டாடித் தீர்த்ததில் உருவான கொத்தணியில்

# மேலும் 1,531 பேருக்குக் 'கொரோனா' நேற்றே அதிக தொற்றாளர்கள் பதிவு

### நாடெங்கும் பல பகுதிகள் முடக்கம்; பி.சி.ஆர். சோதனைகள் அதிகரிப்பு



இலங்கையில் மற்றுமொரு புதிய கொரோனாக் கொத்தணி உருவாகி தாண்டமாடுகின்றது. நேற்று மாத்திரம் 1,531 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நாட்டில் நாள் ஒன்றில் அதிகளவான தொற்றாளர்கள் நேற்றே இனங்காணப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் புத்தாண்டு கொரோனாக் கொத்தணியில் பதிவாகியுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2

## யாழ். பல்கலை மாணவன் உட்பட வடக்கில் மேலும் 19 பேருக்குக் கோரோனா தோற்று

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் 14 பேர் உட்படவடக்குமாகாணத்தில் மேலும் 19 பேருக்குக் கொரோனாவைரஸ்தொற்று நேற்றுஉறுதிசெய்யப்பட்டது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

2

## அனைத்து வழிபாட்டு இடங்களிலும் கூட்டுச் செயற்பாடுகளுக்குத் தடை!

*சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு*



இலங்கையில் அனைத்து மத வழிபாட்டு இடங்களிலும் கூட்டுச் செயற்பாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என சுகாதாரசேவைகள்பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன அறிவித்துள்ளார். நாட்டில் பரவும் கொரோனா வைரஸ் பெருந்தொற்று நிலைமையைக்கருத்தில்கொண்டு நேற்றிலிருந்துமறுஅறிவித்தல் வரை இந்தத்

2

## முல்லைத்தீவில் மூன்று கடைகள் முற்றாகத் தீக்கிரை

முல்லைத்தீவு மாவட்டம், ஒட்டுசுட்டான்பிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்ட முத்தையன் கட்டு இடதுகரை பகுதியில் இடம்பெற்ற தீப் பரவலில் மூன்று கடைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் முல் லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.



## மணிவண்ணனால் அணிவிக்கப்பட்டது புலிகளின் ஆடையே

*கமால் கூறுகின்றார்*



வடக்கு, கிழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகளை நினைவுகூரும் வகையில் நினைவுத் தூபிகளை அமைக்க முடியாது.

11

## விரைவில் சிக்குவார் மைத்திரி மேலும் 107 வழக்குகள் தாக்கல்

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் தொடர்பாக முன்கூட்டியே தகவல் கிடைத்தும் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லைஎனக்குற்றம்சாட்டி, முன்னாள் ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன உட்பட 6 பேருக்கு எதிராக மேலும் 107 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. கொச்சிக்கடை சென்ட் அந்தோனியார் தேவாலய குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தி னர் கொழும்பு மாவட்ட நீதிமன் றத்தில் நேற்று இவ்வாறு வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

2

## அவசர நிலை ஏற்பட்டால் எதிர்கொள்ள குடாநாடு தயார்

(ந.லோகதயாளன்)



11

*சொகுசு ரயில் சேவைகள் உட்பட*

## பல நெடுந்தூர ரயில் சேவைகள் நாளை தொடக்கம் இடைநிறுத்தம்

சொகுசு ரயில் சேவைகள் உட்பட பலநெடுந்தூரரயில்சேவைகளை இரத்துச்செய்யமுடிவுசெய்துள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.
கொரோனா வைரஸ் தொற்று காரணமாக முன்பதிவுகள் குறைவாக இருப்பதால், மே 01 முதல் பல சொகுசு ரயில் சேவைகளை இடைநிறுத்துவதாக ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

11

## முன்னாள் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய காலமானார்

*119 சேவையை அறிமுகப்படுத்தியவர்*



இலங்கையின் 33ஆவது பொலிஸ்மாஅதிபரானகலாநிதி மஹிந்த பாலசூரிய காலம ானார்.
தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று மாலை 5 மணியளவில் கொழும்பு, நாராஹேன்பிட்டியிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர்

2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிவான் நீதிமன்றங்கள் ஊடாக இந்த எழுச்சிப் பேரணிக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் சட்ட ரீதியில் பலவீனமானவை, சட்ட வலிதற்றவை என்று நானே இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டி வந்திருக்கின்றேன்.

அது தொடர்பில் தனது பக்கத்தில் இருக்கும் பலமான சட்டத்துரும்பை சமய சந்தர்ப்பம் பார்த்து மேசையில் போட்டிருக்கின்றார் தமிழ்த்தரப்பின் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

இந்த எழுச்சிப் பேரணி விடயத்தில் நீதிவான் நீதிமன்றங்களின் தடை உத்தரவுகளை மீறி பேரணியில் சென்றனர் என்பதுதான் தமிழ்ப் பிரமுகர்கள் மீதான குற்றச்சாட்டு. இப்படி மீறியமை மூலம் அவர்கள் நீதிமன்றத்தை அவமதித்தனர் என்பது அவர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டின் விரிவு. குற்றச்சாட்டு வலிதானதாக இருக்கலாம். ஆனால் குற்றம் சுமத்தப்படும் மன்றுக்கு அது குறித்து விசாரிப்பதற்கு நியாயாதிக்கம் உண்டா என்ற கேள்வியைக் கேட்டு, சரியான பதிலைப் பெற்ற பின்னர் பொலிஸார் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கலாம்.

பொதுவாக ஒரு நீதிவான் நீதிமன்றத்தின் வளவுக்குள் அல்லது கட்டடத்துக்குள் அந்த நீதிமன்றத்தை அவமதிக்கும் ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் மட்டுமே அந்த நீதிவான் நீதிமன்றம் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை சம்பந்தப்பட்ட தரப்புக்கு எதிராக முன்னெடுத்து விசாரிக்க முடியும்.

ஒரு நீதிமன்றத்தின் உத்தரவை, அந்த நீதிமன்றத்தின் வளவுக்கு வெளியில் மீறியமை உட்பட்ட விடயங்களில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடருவதற்கு வேறு நீதிமன்றங்கள் உள்ளன.

அதற்கு ஓர் உதாரணத்தைத் தருகிறேன். அது முன்னரும் நானே தந்ததுதான்.

பொதுபலசேன அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்புக்கான இரண்டு வழக்குகள் வந்தன.

ஒன்று – கொழும்பில் நீதிவான் நீதிமன்றம் ஒன்றில் நடந்த சம்பவம். காணாமலாக்கப்பட்ட பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியை நீதிமன்றச் சுற்றாடலில் அச்சுறுத்திய விவகாரம். அதே நீதிமன்றம் அந்த விடயத்தை விசாரித்து ஞானசார தேரரைக் குற்றவாளியாகக் கண்டு, அவரை சிறையிலடைத்தது. அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மன்னிப்பில் வெளியே வந்து விட்டார்.

அடுத்தது – முல்லைத்தீவு நீராவியடிக் கோயில் வளாகத்தில் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற உத்தரவை மீறி, பிக்கு ஒருவரின் சடலத்தை எரித்த விவகாரம். இங்கும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஞானசார தேரருக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ளது. உத்தரவை வழங்கியது முல்லைத்தீவு நீதிவான் மன்றம் என்றாலும், நீதிமன்ற உத்தரவை மீறியமையாகக் கூறப்படும் பிக்குவின் சடலம் எரிக்கப்பட்ட சம்பவம் முல்லைத்தீவு நீதிமன்ற வளவுக்குள் இடம்பெறவில்லை. அதனால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அங்கு நடைபெற்று வருகின்றது.

இந்த அடிப்படையே விளங்காமல், பொலிஸார் பொத்துவிலில் தொடங்கி பருத்தித்துறை வரை பல்வேறு நீதிவான் நீதிமன்றங்களில் இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளைத் தொடுத்து, தங்களின் நேரத்தையும், தமிழ்ப் பிரமுகர்களின் நேரத்தையும், சட்டத்தரணிகளின் நேரத்தையும், நீதிமன்றங்களின் நேரத்தையும் வீண்விரயம் செய்து கொண்டிருக்கின்றனர்.

மேற்படி பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான எழுச்சி ஊர்வலம் தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுத் தாக்கல் செய்து, இடைக்காலத் தடை உத்தரவைப்பெற்று, அந்த ஆவணத்துடன் இன்று கல்முனை நீதிமன்றத்தில் எதிர்த் தரப்பினர் சார்பில் முன்னிலையாகின்றார் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன். அவருடன் பெரும் சட்டத்தரணிகள் பட்டாளமே இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. நீதிமன்றத்தில் ஒரு திருவிழாவை எதிர்பார்க்கலாம். வழக்குத் தொடுத்த பொலிஸ் தரப்புக்கு ஜனாதிபதி சட்டத்தரணி நிச்சயம் இன்று நீதிமன்றத்தில் சட்டப் பாடம் எடுப்பார் என எதிர்பார்க்கலாம்.

சரி ஒரு கேள்வி.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நீதிவான் நீதிமன்றத்தில் தொடர முடியாது என்றால் அவற்றை வாபஸ் பெற்று, பொருத்தமான வேறு நீதிமன்றத்தை பொலிஸோ, அரச தரப்போ நாடினால் என்ன நடக்கும்? அப்படியும் நடக்கலாம். அதற்கு முதலில் பொலிஸார் இவ்வளவு காலமும் தாம் செய்தவை தவறு என்று ஒப்புக் கொண்டு அந்த நடவடிக்கைகளில் இருந்து விலக வேண்டும்.

அதன் பின்னர், சரியான நீதிமன்றம் ஒன்றுக்கு அரசுத் தரப்பு போனாலும், அரசுத் தரப்பின் வாதத்துக்கு – நிலைப்பாட்டுக்கு – சட்ட வலிமை சற்று 'வீக்' ஆகத்தான் இருக்கும்.

மேற்படி எழுச்சிப் பேரணிக்கு நீதிவான் நீதிமன்றங்கள் வாங்கிய தடை உத்தரவுகள் பெரும்பாலும் ஒரு தலைப்பட்சமாக, பொலிஸ் விண்ணப்பத்தின் பேரில் கொடுக்கப்பட்டவைதான். அந்தத் தடை உத்தரவின் சட்ட வலிமை சந்தேகத்துக்குரியதே. அதில் வழக்கை முறியடிக்க சுமந்திரனுக்கு வாய்ப்புண்டு.

அத்தடை உத்தரவு வழங்கப்பட்ட நீதிவான் நீதிமன்ற பிரதேசங்களில் சம்பந்தப்பட்ட தமிழ்ப்பிரமுகர்களின் பெயர்கள் குறிப்பிட்டு இந்த உத்தரவுகள் பெறப்பட்டனவா? அன்றேல் பொத்தம் பொதுவில் உத்தரவு வழங்கும் அதிகாரம் அந்தச் சட்டப் பிரிவின் கீழ் நீதிவான் நீதிமன்றங்களுக்கு உண்டா? பொதுவான உத்தரவின் கீழ் விடுவிக்கப்பட்ட உத்தரவு எல்லாப் பிரமுகர்களுக்கும் பொருந்தும் சட்ட வலிமை கொண்டதா? பெயர் குறிப்பிட்டு தடை உத்தரவுகள் வழங்கப்பட்டிருந்தால், சட்ட முறைப்படி அந்தந்தப் பிரமுகருக்கு அவையவை உரிய வகையில் வழங்கப்பட்டனவா? அப்படி உத்தரவுகளைப் பெற்றுக் கொண்டவர் அந்த நீதிமன்றப் பிரதேசத்தில் ஊர்வலமாகச் சென்றாரா?

–இப்படி பொலிஸ் தரப்பை இவ்வழக்கில் குடைந்து வழக்கை உடைப்பதற்கு சுமந்திரன் தரப்புக்கு பலமான சட்ட வலிமை மிக்க ஆதாரங்கள் இன்னும் உள்ளன.

ஆக, 'சரத் வீரசேகர அண்ட் கோ' என்ற பொலிஸ் தரப்பு இந்த வழக்கு விவகாரத்தில் மணலைக் கயிறாகத் திரிக்க முனைகிறது என்றே தோன்றுகின்றது.

'சுமந்திரன் அண்ட் கோ' சட்ட அணி அந்தச் சவாலை எதிர்கொண்டு முறியடிக்கும் வலிமையில்தான் உள்ளது.

சபாஷ். சரியான போட்டி...!

* * *





கொழும்புக்கு இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்த சீனப் பாதுகாப்பு அமைச்சர் வெய் பிங் நாடு திரும்பினார். அவருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று முன்தினம் நடந்த சந்திப்புப் பற்றிய செய்தியும் படங்களும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவால் அனுப்பி வைக்கப்பட்டன.

அனுப்பி வைத்த அந்தப் படங்களை நிறுத்தும்படியும் புதிய படங்களுடன் செய்தி மீள அனுப்பி வைக்கப்படுகின்றது என ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, புதிய படங்கள் செய்தியுடன் மீள அனுப்பப்பட்டன.

என்ன, ஏது என்று தேடிப் பார்த்தபோது ஒரு விடயம் புலப்பட்டது. இரு தலைவர்களும். தமது முஷ்டியை உயர்த்திக் காட்டும் 'போஸை' படங்களுக்குக் கொடுத்தார்கள். அச்சமயம் அந்த போஸுக்கு இருவரும் தயாரான போது எடுக்கப்பட்ட படம் ஒன்று, இரண்டு வித அபிப்பிராயங்களைத் தந்தது.

முதலாவது – இலங்கை ஜனாதிபதிக்கும் சீனப்பாதுகாப்பு அமைச்சருக்கும் இடையில் இராஜதந்திர எல்லை கடந்த நெருக்கத்தை அந்தப்படம் பிரதிபலித்ததாகக் கருதப்பட்டது.

அடுத்தது – இருவரும் டான்ஸ் ஆடுவது போன்ற ஒரு கருத்தியலையும் அது தந்தது.

இந்தப் படம் 'வீக்' ஆனமை ஜனாதிபதி தரப்பில் சீற்றத்தைக் கிளப்பியதாகக் கூறப்பட்டது. அதனால்தான் படங்கள் கைவாங்கப் பெற்று புதிய படங்கள், செய்தியுடன் அனுப்பப்பட்டன.

வாசகர்களின் தகவலுக்காக இரண்டு படங்களையும் இணைத்துள்ளேன். அவர்களே பார்த்து விடயத்தை மதிப்பிட்டுக் கொள்ளட்டும்.

– மின்னல் –

## விரைவில் சிக்குவார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடுவாப்பிட்டிய சென்ட் செபஸ்டியன் தேவாலய குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் கடந்த வாரம் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் 182 வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்நிலையில், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால உட்பட 6 பேருக்கு எதிராக இதுவரையில் 289 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் நட்டஈடு கோரியுள்ளதோடு, கடுவாபிடிய தேவாலயத்தில் பாதிக்கப்பட்டவர்கள் கோரியுள்ள நட்டஈட்டின் மொத்த தொகை 1,250 மில்லியன் ரூபா ஆகும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, அரச புலனாய்வு சேவையின் பிரதானி நிலந்த ஜயவர்தன மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த வழக்குகளின் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான தகவல்கள் கிடைத்திருந்தும், தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதை மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## மேலும் 1,531....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் கடந்த மூன்று நாள்களாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 484 ஆக எகிறியுள்ளது.

புதிய கொரோனா கொத்தணியின் தீவிரத்தையடுத்து நாடெங்கும் பல பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதேவேளை, நாடெங்கும் எழுந்தமான பி.சி.ஆர். பரிசோதனைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் கூறினார்.

மேலும், 362 பேர் கொரோனா வைரஸ் தொற்றுப் பாதிப்பிலிருந்து குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ள நிலையில், தொற்றிலிருந்து மீண்டோரின் மொத்த எண்ணிக்கை 95 ஆயிரத்து 445 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவால் சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 661ஆக உள்ள நிலையில், இன்னும் 10 ஆயிரத்து 378 பேர் தொடர்ந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அனைத்து வழிபாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மத வழிபாட்டு இடங்களில் ஒரே நேரத்தில் 25 பேர் மாத்திரமே வழிபாட்டில் ஈடுபட முடியும் எனவும் சுகாதார பணிப்பாளர் மேலும் கூறியுள்ளார்.

## யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 760 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே 19 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டது. இவர்களில் நால்வர் சுய தனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டவர்கள். மற்றைய ஒருவர் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிலும் திருகோணமலையைச் சேர்ந்த ஆசிரிய பயிற்சியாளர்.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நால்வருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இந்த நால்வரில் இருவர் கொடிகாமம் சந்தை வியாபாரிகளாவர். மற்றைய இருவரும் கொடிகாமம் வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை, நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தலில் இருந்த 2 பேருக்கும் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது.

சாவகச்சேரி வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை மாணவன் ஒருவருக்கும் தொற்று கண்டறிப்பட்டது.

இதேவேளை, வவுனியா வைத்தியசாலையில் இருவருக்கும், கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒருவருக்கும் முல்லைத்தீவு வைத்தியசாலையில் ஒருவருக்கும் என நால்வருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது – என்றார்.

## முன்னாள் பொலிஸ்மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஜித் ரோஹண தெரிவித்தார்.

1953இல் பிறந்த அவர் மரணிக்கும்போது வயது 68.

1978 ஆம் ஆண்டு பயிற்சி உதவிப் பொலிஸ் பரிசோதகராகப் பொலிஸ் சேவையில் இணைந்த அவர், பல்வேறு பதவிகளில் வகித்து வந்துள்ளார்.

குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்குக்குப் பொறுப்பாக இருந்தார்.

2010–2011ஆம் ஆண்டில் இலங்கையின் 33ஆவது பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றியுள்ளார். அதன் பின்னர் பிரேசில், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளுக்கான தூதுவராகவும் கடமையாற்றிய அவர், 2014இல் சட்ட ஒழுங்கு அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

குறிப்பாக, போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த காலப் பகுதியில், நாடு முழுவதும் 119 அவசர தொலைபேசி சேவையை மஹிந்த பாலசூரிய அறிமுகப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது இறுதிக்கிரியைகள் தொடர்பான விவரம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு இணைப்பு வந்தால் முதலமைச்சர் வேட்பாளராகத் தயார்!

## என்கிறார் இரா.சாணக்கியன்

வடக்கு – கிழக்கு இணைந்த மாகாண சபைத் தேர்தல் நடைபெறுமானால் அதில் தான் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவேன் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டு.ஊடக அமையத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மாகாணசபைத் தேர்தல் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

சமகால அரசியலிலே மிக முக்கியமான பிரச்சினையாகத் தமிழ் அரசியல்வாதிகளின் மத்தியிலும்,முஸ்லிம் அரசியல்வாதிகளின் மத்தியிலும் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தரம் குறைக்கப்பட்ட விடயம் இப்போதும் பேசுபொருளாகவும்,மிகவும் சூடாகவும் பேசப்பட்டிருந்தமை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

கடந்த வாரம் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகமாகத் தரம் குறைத்து பெயர் மாற்றி சமல் ராஜபக்ஷவின் அமைச்சின் ஊடாகக் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டமையை நாங்கள் அறியக்கூடியதாக இருந்தது.

இந்தவிடயமாகக் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சர் வஜிர அபேவர்தனவிடம் எங்களுடைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நேரடியாகத் தெரியப்படுத்தி அதனைக் கதைத்து கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு நிரந்தரமாக ஒரு கணக்காளரை நியமித்திருந்தோம்.கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குரிய கணக்காளர் நியமனம் சம்பந்தமான பிரச்சினை 1993 ஆம் ஆண்டு முதல் கணக்காளர் வெற்றிடமாகக் காணப்பட்டது.

குறித்த பிரதேச செயலகத்துக்கு கணக்காளர் நியமிக்கப்படாமையை முதன் முதலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிமலநாதன் தலைமையில் ஒத்திவைக்கும் பிரேரணையில் நாடாளுமன்றத்தில் கதைத்திருந்தோம். இதனை அம்பாறை மாவட்டத்தில் உள்ள சில சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும்,சில முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட வேண்டும் என்பதை மனதளவில் ஏற்றுக்கொண்டார்கள்.

ஆனால் துரதிஷ்டவசமாக கணக்காளர் கடமையை பொறுப்பேற்பதற்கு முன்னர் சிலரின் சதித்திட்டத்தால் தடுக்கப்பட்டு கணக்காளர் கடமையை பொறுப்பேற்கவில்லை என்பது கல்முனை மக்களுக்கு மட்டுமன்றி ஒன்றுபட்ட தமிழ்,முஸ்லிம் மக்களுக்கும் கவலையை தந்திருந்தது. அத்துடன் நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியும் மாறிப்போய் புதிய அரசாங்கத்தின் ஆட்சியும் வந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்திவைக்கும் பிரேரணையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு தமிழ் அரசியல்வாதிதான் அதை நிறைவேற்றக்கூடாது என்றும்,செய்யக்கூடாது என்றும், காலப்போக்கில் நாங்கள் அதனைச் செய்வோம் எனக்கூறப்பட்டது.




இதனால் இப்போது அரசுடன் இணைந்திருக்கும் ஆளும்தரப்பு அரசியல்வாதிகளுக்கு பாதகமான சூழ்நிலை உருவாக்கலாம் என்பதற்கு இணங்க அன்று கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றேன்.

நாங்கள் நல்லாட்சி அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுத்துள்ளோம் என்றும்,கிழக்கிலே தமிழர்,முஸ்லிம்கள் ஒற்றுமைப்படக்கூடாது என்பதற்காகவும்,கிழக்கில் தமிழர்களின் இருப்பு பறிமுதல் செய்யப்படுவதற்கு தமிழ்தேசியக் கூட்டமைப்புத்தான் காரணம் என பேசியவர்கள் இன்று கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் குறைக்கப்பட்டதற்கு அப்பிரச்சினை சம்பந்தமாக பேசாமல் இருக்கின்றமை கவலையளிக்கின்றது.இவ்வாறான அரசியல்வாதிகளை கல்முனை மக்களும்,அம்பாறை மாவட்ட மக்களும் இனியும் நம்பி ஏமாறக்கூடாது என்பதை தெரியப்படுத்துகின்றேன்.

ஆனால் இன்று நாட்டிலே பல்வேறு பிரச்சினைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பிரச்சினைகள் உட்பட பல பிரச்சினைகளில் தமிழர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாகவும்,சமாதானமாகவும் செயற்படுகின்றார்கள்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்மக்களும்,முஸ்லிம்மக்களும் ஒற்றுமையாக செயற்படுவதை அவதானித்த ஒருசில தமிழ் அரசியல்வாதிகளும், முஸ்லிம் அரசியல்வாதிகளும் இணைந்து தங்களின் குறுகியகால அரசியலுக்காகவும், தங்களின் அரசியல் வியாபாரத்திற்காகவும்,அரசியல் இருப்பு வீழ்ச்சி காணும் என்பதற்காகவும் எடுத்த நடவடிக்கைதான் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தரம் குறைத்து அனுப்பப்பட்ட கடிதமாகும்.இந்த விடயமாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் நான் தொலைபேசியில் தொடர்புகொண்டு கதைத்துள்ளேன்.

மாகாணசபைத் தேர்தல் நடப்பதற்கான எந்த அறிவிப்பும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.அதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டு மாகாணசபைத் தேர்தல் நடைபெறுமானால் அதில் நான் போட்டியிடுவேன். – என்றார்.



## பிரான்ஸில் போராட்டத்தில் ஈடுபடும் தமிழருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் சிங்களப் பெண்

ஈழத்தமிழர்களுக்கு நீதிகோரி பிரான்ஸிலுள்ள நகரசபைக்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட புலம்பெயர் தமிழர்களுடன் சிங்களப் பெண் ஒருவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ள காணொளி வெளியாகியுள்ளது.

இதன்போது அந்தப் பெண், 'யுத்தத்தில் இராணுவத்தினரும் உயிரிழந்ததாகவும், அப்படியென்றால் தாங்களும் நீதி கோருவதாகவும்' அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கொரோனா வைரஸ் பரவல் நிறுவனங்களில் அதிகரிப்பு

### வைத்தியர் சுதத் சமரவீர அறிவிப்பு

நாட்டில் நிறுவனங்களில் கொரோனா வைரஸின் பரவல் அதிகரித்து வருவதாக தலைமை தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர நேற்று (வியாழக்கிழமை) தெரிவித்தார்.

மூடிய மற்றும் குளிரூட்டப்பட்ட இடங்களில் தொற்றுநோய்க்கான ஆபத்து மிகவும் அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அலுவலக வளாகத்திற்குள் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகளவில் அதிகரிப்பதை அவதானிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒரு மூடிய அறையில் குறிப்பாக குளிரூட்டப்பட்ட இடங்களில் மக்கள் வைரஸால் பாதிக்கப்படுவார்கள். எனவே, திறந்த ஜன்னல்கள் கொண்ட சூழலில் தங்க பரிந்துரைக்கப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

மூடிய அறையிலோ அல்லது குளிரூட்டப்பட்ட அறையிலோ தங்கும்போது சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாக பின்பற்றுமாறும் அவர் மக்களிடம் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில், மக்கள் கொரோனா அறிகுறிகளால் பாதிக்கப்படுகையில் அல்லது



உடல்நிலை சரியில்லாமல் இருக்கும்போது உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லுமாறும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் கண்டறியப்பட்ட புதிய மாறுபாடு அதிக அளவில் பரவும் தன்மையைக் கொண்டிருப்பதால் பொது மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## பனாகொட இராணுவ முகாமில் யானை தாக்கி படைவீரர் பலி

*பனாகொட இராணுவ முகாமில் யானைத் தாக்கி படைவீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.*

*முகாமில் உள்ள யானை ஒன்றை நீராடுவதற்காக அழைத்துச் சென்ற போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*நீராடுவதற்காக சென்றிருந்த யானை, படைவீரரைத் தாக்கியுள்ளது. மாவனல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதான படைவீரர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.*

*யானைத் தாக்குதலுக்கு இலக்கான படைவீரர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.*

## கொழும்பு, நீர்கொழும்பு வைத்தியசாலைகளில் ஒதுக்கப்பட்டுள்ள 45 தீவிர சிகிச்சை பிரிவுகள்

கோவிட் நோயாளிகளின் நலனுக்காகக் கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு மற்றும் நீர்கொழும்பு வைத்தியசாலைகளில் மேலும் 45 தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகளை சுகாதார அதிகாரிகள் ஒதுக்கியுள்ளனர் என அமைச்சர் சன்ன ஜெயசுமன தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கோவிட் நோயாளிகளுக்காக முதலில் ஒதுக்கப்பட்ட அதிதீவிர சிகிச்சைப்படுக்கைகள் தற்போது நிரப்பப்பட்டுள்ளன.

அதேநேரம் ஏனைய முக்கியமான நோயாளிகளுக்கும் போதுமான படுக்கைகள் உள்ளன என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பண்டிகை காலத்திற்குப் பிறகு, நாடு முழுவதும் தற்போது கோவிட் தொற்றுக்கள் அதிகரித்துள்ளன. இந்த நிலையில் தொடர்ச்சியான இரண்டாவது நாளாகவும், ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களாக கண்டறியப்பட்டுள்ளனர்.

## வெளியேறுபவர்கள், உள்நுழைபவர்களுக்கு மேல்மாகாணத்தில் பி.சி.ஆர். சோதனை

மேல்மாகாணத்தில் இருந்து வெளியேறுபவர்கள் மற்றும் மேல் மாகாணத்திற்குள் பிரவேசிப்பவர்களுக்கு நேற்று (வியாழக்கிழமை) பிற்பகல் 12 மணி முதல் கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொலிஸார், சுகாதார சேவைகள் மற்றும் முப்படையினர் இணைந்து இந்த விசேட சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 12 இடங்களில் இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

## அவசர கொரோனாக் கட்டுப்பாடுகள் பள்ளிவாசல்களுக்கு விதிக்கப்பட்டன

### வக்பு சபை பணிப்புரை

பள்ளிவாசல்களுக்கு அவசர கொரோனாக் கட்டுப்பாடுகள் விதிக்க வக்பு சபை பணிப்புரை விடுத்துள்ளதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவல் நிலைமையைக் கருத்திற்கொண்டு, சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கேற்ப இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அந்த அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய சகல பள்ளிவாசல்களிலும் தாராவீஹ், ஜும்ஆத் தொழுகை மற்றும் பயான்கள், இயாமுல்லைல், இஃதிகாப், தவ்பா போன்ற அனைத்து கூட்டு செயற்பாடுகளுக்கும் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பள்ளிவாசல்களில் ஒரே நேரத்தில் தொழுகைக்காக அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 25 பேராக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், தொழுகைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தீவிர நடவடிக்கை தேவை

கொரோனாத் தொற்றுப் பரவல் தொடர்பில் அரசுத் தரப்பில் இருந்து வெளிப்படும் அறிவிப்புகளும் செயற்பாடுகளும் மக்களுக்கு மயக்கம் தருவனவாக இருக்கின்றன.

தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக – கட்டுக்குள் கொண்டு வருவதற்காக – நாடு முழுவதும் முடக்க நிலையைக் கொண்டு வாருங்கள் என்று சுகாதார அமைப்புகள், மருத்துவத் தரப்புகள் கோரிக் களைத்து விட்டன.

அதற்கு இடமில்லை என்று கைவிரித்து விட்டது ஆளும் தரப்பு மேலிடம்.

நாட்டை முடக்கினால் ஏற்படக் கூடிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் நிலையில் நாடும் இல்லை, அரசும் இல்லை. அதனால் நாட்டை முடக்காமலேயே கொரோனா நெருக்கடியை முகம் கொள்வதுதான் அரசுக்குள்ள ஒரே வழி. அதில் ஆளும் தரப்பு தீர்க்கமாக இருப்பதாகவும் தெரிகின்றது. நாட்டின் ஜனாதிபதி, பிரதமரில் இருந்து, அரசுப் பேச்சாளர்கள், இராணுவத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வரை பலரும் அதை உறுதிப்படுத்தி விட்டனர். திரும்பத் திரும்பக் கோடி காட்டியும் விட்டனர்.

ஆனால், அரசுப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பின்பற்றி மக்கள் ஒத்துழைப்புத் தராவிட்டால் மிகக் கடுமையான – தீவிரமான – கெடுபிடியான – நடவடிக்கைகள் எடுக்கப்படும் நிலைமை ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கின்றார்.

நல்லது. முடக்கம் அல்லாத வேறு என்ன கடும் நடவடிக்கையை அவர் உத்தேசமாக வைத்திருக்கின்றார்?

ஒருபுறம் நாட்டை முடக்க மாட்டோம் என்ற வீறாப்புப் பேச்சு. மறுபுறம் கடும் நடவடிக்கை என்ற அச்சுறுத்தல். ஒன்றுக்கொன்று முரண்பாடான நிலைமை இது.

நடக்க முடியாத நொண்டி வாத்தியார், கதிரையில் இருந்தவாறு மாணவர்களை நோக்கி *‘எழும்பி வந்தேன் என்றால் உங்கள் எல்லோரது தோலையும் உரித்து எடுத்துவிடுவேன்’* என்று அச்சுறுத்துவதற்கு ஒப்பானது அமைச்சர்களின் இந்த மிரட்டல்.

வெறுமனே கோவில்கள், வழிபாட்டிடங்கள், கல்யாண வீடுகள், செத்த வீடுகளில் மட்டும் கொரோனா கெடுபிடியைக் காட்டுவதில் அர்த்தமில்லை. அதையும் தாண்டி அரச வைபவங்கள், அரச நிறுவனங்களில் நடைபெறும் நிகழ்வுகளையும் கவனிக்க வேண்டும்.

தேசிய வெசாக் கொண்டாட்டங்களை நயினாதீவில் நடத்தும் திட்டத்தை நிறுத்த வேண்டும். அதையும் கூட ஐம்பது பேருக்கு உட்பட்ட நிகழ்வாகவே நடத்த வேண்டும்.

கொரோனாவைக் காட்டி பாடசாலையை மூடுவதில் தப்பில்லை. ஆனால் இப்படி ஆள்கள் ஒன்று சேரும் இடங்கள் பாடசாலைகள், கோவில்கள் மட்டும் அல்ல. அதற்கு அப்பாலும் முக்கிய பல இடங்கள் உள்ளன. அவை குறித்தும் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக பாடசாலைகளில் மாணவர்கள் கூடுகின்றமை போல, பாதுகாப்புப் படையினர், பொலிஸார் கூடும் பல முகாம்கள், தளங்கள், களங்கள் உள்ளன.

அவை தொடர்பில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது வெறும் படை அதிகாரிகளின் கண்காணிப்பையும் தாண்டி, சுகாதாரத் தரப்பினரின் அவதானிப்புகள் மூலமும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

கொரோனாத் தொற்று ஆரம்ப காலத்தில் கடந்த வருடத்தில் வெலிசறை கடற்படை முகாமில் ஏற்பட்ட தொற்றின் பாடம் நாட்டுக்கு உண்டு.

சிறைக் கொத்தணி போல, படை முகாம்களில் இருந்தும் புதிய, புதிய கொத்தணிகள் உருப்பெறும் ஆபத்து நிறைய உண்டு.

மக்கள் அதிகம் கூடும் இடங்களில் – நெருக்கமாகப் பணியாற்றும் தளங்களில் – படை முகாம்கள் மிக முக்கியமானவை.

அவை தொடர்பில் உரிய கட்டுப்பாட்டு முன்னேற்றப்பாட்டு சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

கொரோனாப் பரவலைக் காட்டி பாடசாலைகள் மூடப்படும் அதேசமயம், படைகளில் புதிதாகச் சேர்க்கப்பட்டோருக்கான பயிற்சி முகாம்கள் – அதுவும் வடக்கிலேயே – ஆரம்பிக்கப்படுகின்றன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

தினசரி கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை கட்டுமட்டில்லாமல் உயர்ந்து வருகையில் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தாரதம்மியம் பார்க்காமல் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதற்கு ஒத்துழைப்பது பொதுமக்கள் அனைவரினதும் கடமையும், பொறுப்புமாகும்.

# ரிஷாத்தை விடுதலை செய்யக்கோரி மன்னாரில் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு







அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கைதுசெய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவரை விடுதலைசெய்யக் கோரியும் மன்னாரில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படடது.

சமூக இடைவெளிகளைப் பின்பற்றி, முகக் கவசம் அணிந்து, சுகாதார வழிகாட்டலுக்கு அமைவாக நேற்று (வியாழக்கிழமை) இந்தப் போராட்டம் நடைபெற்றது.

குறித்த, போராட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் முஜாஹிர், முசலி பிரதேச சபை தவிசாளர் சுபிஹான் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர். இதேவேளை, ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டமைக்கு எதிராக, கடந்த புதன் கிழமை வவுனியாவில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு - கிழக்கு பகுதிகளில் சிவராமின் நினைவு அனுஷ்டிப்பு

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் நினைவு தினம் வடக்கு கிழக்கில் பல்வேறு இடங்களில் அனுஷ்டிக்கப்பட்டது.

**யாழ்ப்பாணம்**

யாழ். ஊடக அமையத்தில் நேற்ற (வியாழக்கிழமை) மதியம் நடைபெற்ற நினைவு நிகழ்வில் யாழ். ஊடகவியலாளர்கள் கலந்து






கொண்டு சிவராம் மற்றும் ரஜிவர்மன் ஆகியோரின் உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

ஊடகவியலாளரான தராக்கி சிவராம் என்றழைக்கப்படும் தர்மரத்தினம் சிவராம் கடந்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வைத்து வெள்ளை வானில் வந்த இனம்தெரியாதவர்களால் கடத்தப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்துக்கு அருகில் படுகொலையான நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

அதேபோல், ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் ‘உதயன்’ பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளராகக் கடமையாற்றி வந்த வேளை கடந்த 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் திகதி காலை 10 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இதேவேளை, குறித்த நினைவு நிகழ்வில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்த ஊடகவியலாளர்கள் மற்றும் மக்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் கொரோனோ தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் நலம் பெற வேண்டி பிரார்த்தனையும் இடம்பெற்றது.

**வவுனியா**

இதேவேளை, படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் தர்மரட்ணம் சிவராமின் 16ஆவது ஆண்டு நினைவு தினம் வவுனியாவிலும் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில், அதன் தலைவர் ச.வசந்தகுமார் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றதுடன் அகவணக்கத்துடன் ஆரம்பமாகிய நிகழ்வில் அன்னாரது திருவுருவப் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.





இதன்போது, சிவராம் தொடர்பான நினைவுரையை ஊடகவியலாளர் ந.கபிலநாத் நிகழ்த்தியிருந்தமையுடன் நிகழ்வில் வவுனியாவைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

**மட்டக்களப்பு**

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் மட்டு. ஊடக







அமையத்திலும் ஊடகவியலாளர் சிவராமின் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது. சிவராமின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து, 16 ஈகைச் சுடரேற்றப்பட்டு, மலர்தூவி, இரண்டு நிமிடங்கள் அகவணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில், சிரேஷ்ட ஊடகவியலாளரும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பா.அரியநேத்திரன், மூத்த ஊடகவியலாளர்களான சிவம் பாக்கியநாதன், அ.கங்காதரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு சிவராமிற்கு அஞ்சலி செலுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாங்கள் விரும்பும் தடுப்பூசியை மக்கள் தெரிவுசெய்ய முடியாது

## வைத்திய நிபுணர் சுதர்ஷினி கருத்து



கொழும்பு, ஏப்.30

பொதுமக்கள் தாங்கள் விரும்பும் கொரோனா வைரஸ் தடுப்பூசியைத் தெரிவு செய்ய முடியாது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அதற்கு பதிலாக அவர்களுக்கு வழங்கப்படும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர் –

இலங்கை இதுவரை அஸ்ட்ரா ஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசியைப் பயன்படுத்தியது. சீனசினோ பார்ம் தடுப்பூசியின் பங்குகள் தற்போது இலங்கையில் உள்ளன. அதனை உள்ளூர்வாசிகள் பயன்படுத்த அனுமதிக்காகக் காத்திருக்கிறார்கள்.

ரஷ்யாவிலிருந்து வாங்கிய ஸ்புட்னிக் வி தடுப்பூசி விரைவில் இலங்கைக்கு வரவுள்ளது.

நாட்டில் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ள நிலையில், கையிருப்பில் உள்ள தடுப்பூசிகளைக்கொண்டு இரண்டாவது டோஸை செலுத்தும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் பொதுமக்கள் தாங்கள் விரும்பும் கொரோனா வைரஸ் தடுப்பூசியைத் தெரிவு செய்ய முடியாது. – என மேலும் தெரிவித்துள்ளார்.

# நுவரெலியாவில் பஸ் விபத்து 20 பேர் காயம்





நுவரெலியா – ஹைய் பொரஸ்ட் பகுதியிலிருந்து இராகலை நகரை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று இராகலை – கோணப்பிட்டிய பிரதான வீதியில் மாகு டுகலை தோட்டப் பகுதியில் மரக்கறி தோட்டம் ஒன்றில் குடைசாய்ந்துள்ளது.

ஹைய்பொரஸ்ட் பகுதியிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு இராகலை பகுதிக்குச் சென்ற குறித்த பஸ் அன்று பிற்பகல் 12 மணியளவில் பாதையை விட்டு விலகி சுமார் 20 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்த 20 பேர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பஸ் சாரதிக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக சாரதி கட்டுப்பாட்டை இழந்ததால் இந்த விபத்து நேர்ந்ததாக நேரடி விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த 20 பேரும், ஹைய் பொரஸ்ட் வைத்தியசாலையில் ஆரம்ப சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பின் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனவும், அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு காயமடைந்தவர்களில் சிறுவர்களும் அடங்குகின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்த விபத்து தொடர்பில் இராகலை போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலைகளை மீளத் திறத்தல் இறுதித் தீர்மானம் மே 2 இல்!

சடுதியாக பரவலடைந்துள்ள கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தைக் கருத்திற்கொண்டு தற்காலிகமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பாக இறுதித் தீர்மானம் எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எடுக்கப்படும். அனைத்து பல்கலைக்கழகங்களையும் மே மாதம் 10 ஆம் திகதி திறக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்வி பொதுதராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இன்னும் ஒரு வார காலத்திற்குள் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் கல்வித்துறைக்கு ஏற்பட்டுள்ள சவால்களை வெற்றிகொள்ள அரசாங்கம் சிறந்த திட்டங்களை இதுவரையில் முன்னெடுத்துள்ளது.

நெருக்கடியான சூழ்நிலையில் தேசிய பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன. பாடசாலைகளில் பின்பற்ற வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பாக விசேட சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்ட நிலையில் முதலாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் நிறைவு பெற்றன.

கடந்த 19 ஆம் திகதி முதல் இரண்டாம் தவணைக் கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது. கொவிட் – 19 வைரஸ் தாக்கம் சடுதியாக அதிகரித்த காரணத்தால் நாடு தழுவிய ரீதியில் உள்ள அனைத்துப் பாடசாலைகளையும் இன்று வரை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. சுகாதாரத் தரப்பினர் விடுத்த கோரிக்கைகளுக்கு அமையவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மாணவர்களின் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பாக அரசாங்கம் முன்னுரிமை வழங்கும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்குத் தற்காலிகமாக ஏற்படும் தடைகள் கூட அவர்களின் எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அனைத்துத் தரப்பினரும் விளங்கிக் கொள்ள வேண்டும். நாட்டின் சுகாதார பாதுகாப்பு தொடர்பில் அனைத்துத் தரப்பினும் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளில் இரண்டாம் தவணைக் கற்றல் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக இறுதித் தீர்மானம் எதிர்வரும் இரண்டாம் திகதி எடுக்கப்படும். பாடசாலைகளில் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை கடுமையாகப் பின்பற்றுகின்றமை தொடர்பாக புதிய திட்டம் வகுக்கப்படும்.

நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களையும் கடந்த 27 ஆம் திகதி திறக்கத் தீர்மானிக்கப்பட்டது கொவிட் தாக்கத்தால் அத்தீர்மானமும் பிற்போடப்பட்டது. அனைத்து பல்கலைக்கழகங்களையும் மே மாதம் 10 ஆம் திகதி திறக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுதராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை ஒரு வார காலத்திற்குள் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செயற்பாட்டு பரீட்சைக்குத் தோற்றிய பெரும்பாலான மாணவர்கள் கொவிட் – 19 வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமையால் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்துக்குச் செல்லத் தகுதியுள்ள மாணவர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் பல்கலைக்கழகத்துக்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள். – என்றார்.

# இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கையில் கட்டுப்பாடுகள்

இலங்கைக்கு வரும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என இலங்கை சுற்றுலாத்துறை அறிவித்துள்ளது.

இருப்பினும் விசேட கட்டுப்பாடுகளுடன் இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருகின்றனர் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

புதுடெல்லியில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள நிலையில் இலங்கைக்கு வருகை தரும் இந்தியர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

ஏற்கனவே நாட்டை வந்தடைந்த இந்தியர்கள் தனி ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் மற்ற சுற்றுலாப் பயணிகளுடன் அவர்களுக்கு எந்த தொடர்பும் இல்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இருப்பினும் சுகாதார அதிகாரிகள் தீர்மானித்தால் விமான நிலையங்களை மூடுவது அல்லது இலங்கைக்கு வருவதை ஒட்டுமொத்தமாக குறைப்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறினார்.

# கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் தரமுயரவேண்டுமென ஹக்கீம் கூறியிருந்தார்

## ஹென்றி மகேந்திரன் சுட்டிக்காட்டு



கல்முனை வடக்கு உப பிரதேச செயலகமாக தரம் குறைப்பதற்கு காரணமாக உலமா கட்சியின் செயற்பாடு பின்னணியில் உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் குறிப்பிட்டார்.

கல்முனை மாநகர சபையின் 37 ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு கடந்த புதன்கிழமை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்றது இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் உலமா கட்சி தலைவர் பஸில் ராஜபக்ஷவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் கல்முனை உப பிரதேச செயலகமாகத் தரம் குறைக்கப்பட்டுள்ளதாக அறியக் கிடைத்திருக்கின்றது. நிஷாத்பதியுதீன்மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அல்லாத ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் உலமா கட்சித் தலைவரும் இணைந்து செயற்பட்டனர் என ஒரு வதந்திபரவிகொண்டு இருக்கின்றது. இந்த விடயம் தொடர்பாக கடந்த 35 வருடங்களாக குழப்பப்பட்டு வருகின்றோம்.

தமிழ் முஸ்லிம் மக்களைக் குழப்புகின்ற சக்தி ஒன்று இதன் பின்னணியில் இருந்து செயற்படுகின்றதா? என்ற சந்தேகமும் நிலவுகின்றது. தற்போது முஸ்லிம் தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமை கீறு ஏதோ ஒரு வழியில் வெளிப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களான கோவிந்தன் கருணாகரம், செல்வம் அடைக்கலநாதன், சிவஞானம் சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் சந்தித்து முறையிட்டு இருந்தார்கள்.

இதன்போது இராஜாங்க அமைச்சர், பிரதேச செயலகம் தொடர்பாக வெளிவந்த கடிதத்தின் அமுலாக்கத்தை நிறுத்துமாறு உத்தரவிட்டிருந்தார்.

இது தவிர, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் பேசியிருந்தார். முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி ஆட்சேபனையை முன்வைத்திருந்தார்.

கடந்த கல்முனை மாநகர சபையின் வரவு – செலவுத் திட்டத்தின் போது நாங்கள் ஆதரவை வழங்கியபோது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட வேண்டும் எனவும் இது நியாயமான தமிழ் மக்களின் கோரிக்கை எனவும் அவர்களுக்குரிய உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதையும் அதை மனப்பூர்வமாக ஆதரிப்பதாகவும் பதிவு செய்திருந்தார்.

இந்த பிரதேச செயலகத் தரமுயர்த்தும் போதும் பிரிக்கப்படும் போதும் முஸ்லிம் மக்களுக்குப் பாதகமாக ஒன்றும் இடம்பெறக் கூடாது என்றும் செல்லியிருந்தார்.

இந்த அடிப்படையில் நாங்கள் நிதானமாக இருந்து தமிழ் மக்களுக்குக் கிடைக்கவேண்டிய பிரதேச செயலகத்தை வழங்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். இது சம்பந்தமாக பிற்காலத்தில் நாங்கள் ஒற்றுமையுடன் செயற்படுவோம். – எனத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு



அம்பாறை, நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட மத்திய முகாம் – 04 கிராம சேவையாளர் பிரிவில் வசித்து வந்த பொன்னையா ரசிகரன் (வயது 29) எனும் குடும்பஸ்தர், நேற்று (வியாழக்கிழமை) சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார், குடும்ப உறவினர்களிடம் ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன், சடலம் மீட்கப்பட்ட பகுதிக்கு மேற்படி குடும்பஸ்தரை அழைத்து வந்த நபரொருவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த மரணம், தற்கொலையா அல்லது கொலையா என்ற கோணத்தில் மேலதிக விசாரணைகளை மத்திய முகாம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

நாளாந்த கூலி வேலை மற்றும் மீன் வியாபார தொழிலில் ஈடுபட்டு வரும் உயிரிழந்துள்ள நபருக்கு, 6 வயதில் குழந்தை ஒன்றும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னிப்புக் கிடைக்கும் நம்பிக்கையில் ரஞ்சன்

## திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்ட தகவல்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், விரைவில் மன்னிப்பு வழங்கப்படும் என்று நம்பப்படுகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அங்குணகொலபெலஸ்ஸ சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை சந்தித்து அவரது நலன் தொடர்பாக திஸ்ஸ அத்தநாயக்க விசாரித்திருந்தார்.

ஜனாதிபதி மன்னிப்பு தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மற்றும் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இது தொடர்பாக ரஞ்சனுக்கு அறிவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ரஞ்சனும் தனக்கு மன்னிப்பு கிடைக்கும் என்று நம்புகின்றார் என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் ரஞ்சன் ராமநாயக்க சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் எனவும், உலகின் முன்மாதிரிகளைக் கருத்தில் கொண்டு மன்னிப்பு வழங்குவது நியாயமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைத் தமிழ் அகதி ஒருவர் ஆஸ்திரேலியாவில் விபத்தில் பலி

ஆஸ்திரேலியா – விக்டோரியா பகுதியைச் சேர்ந்த தமிழ் அகதி ஒருவர் விபத்தொன்றில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து அண்மையில் இடம்பெற்றுள்ளதாக ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைப் பின்னணியைக் கொண்ட 38 வயதான நிக்சன் என்பவரே கடந்த 20 ஆம் திகதி உயிரிழந்துள்ளார் என அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நான்கு பெண் பிள்ளைகளின் தந்தையான நிக்சன் குடும்பத்துடன் வாழ்ந்துவந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முழுக்குடும்பமும் நிக்சனின் வருமானத்தில் தங்கி வாழ்ந்தனர் எனவும் திடீரென இவர் மரணமடைந்துள்ளமையால் குடும்பத்தினர் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படகு மூலம் வந்து ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரிய நிக்சன் குடும்பத்தினரின் அகதி தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் இவர்களுக்கு கொடுப்பனவும் கிடைக்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# 'என் – ஜாய்' தேங்காய் எண்ணெயிலும் புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம்

'என் – ஜாய்' என்ற பெயரில் விற்பனையாகும் தேங்காய் எண்ணெய் பங்குகளை சந்தையில் இருந்து திரும்பப் பெறுவதாக நுகர்வோர் விவகார சபை அறிவித்துள்ளது.

என் – ஜாய் தயாரிப்புகள் மீது கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் புற்றுநோயை ஏற்படுத்தும் எப்லாடாக்சின் உள்ளமை கண்டறியப்பட்டதாக நுகர்வோர் விவகார சபையின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இருப்பினும் உள்ளூர் கொப்பராவைப் பயன்படுத்தி என் – ஜாய் தேங்காய் எண்ணெய் தயாரிக்கப்பட்டது என நுகர்வோர் விவகார சபையின் மூத்த அதிகாரி ஒருவர் கூறினார்.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவின் அறிவுறுத்தலின்படி, சந்தையில் உள்ள அனைத்து தேங்காய் எண்ணெயிலும் நச்சுத்தன்மை உள்ளதா என்பது தொடர்பாக நுகர்வோர் விவகார சபை விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, பேராதெனிய பல்கலைக் கழகத்தின் ஆய்வகங்களில் என் – ஜாய் தேங்காய் எண்ணெய் என்ற பெயரில் தேங்காய் எண்ணெய் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன.

தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது சோதனையிலும் அந்த எண்ணெயில் எப்லாடாக்சின் உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து, தேங்காய் எண்ணெயை சந்தையில் இருந்து அகற்ற நுகர்வோர் விவகார சபை முடிவு செய்துள்ளது.

அதேநேரம், கிராண்ட்பாஸில் உள்ள என் – ஜாயின் எண்ணெய் களஞ்சியசாலைக்கு நுகர்வோர் விவகார சபை அதிகாரிகள் கடந்த புதன்கிழமை சீல் வைத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 485 லீற்றர் கோடா வைத்திருந்த ஒருவர் கிளிநொச்சியில் கைது

கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்புப் பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வட்டக்கச்சி பத்து வீட்டுத்திட்டம்பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த நபரிடமிருந்து 485 லீற்றர் கோடாவும் 35 லீற்றர் கசிப்புப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதையடுத்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை கிளிநொச்சி பொலிஸாரிடம் மது ஒழிப்புப் பிரிவினர் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று பொலிஸ் பிணையில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# மன்னாரிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு சுற்றுலா மேற்கொள்வதைத் தவிர்க்குக!



மன்னார் மாவட்டம் தற்போதைய சூழ்நிலையில் பாதுகாப்பாக உள்ள போதிலும், நாங்கள் கவனம் இன்றி நடந்து கொண்டால் எதிர்வரும் நாள்களில் நாங்கள் பாரதூரமான நிலையை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனச் சுகாதாரத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

எனவே மக்கள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் கொவிட் தொற்று அபாயத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பது தொடர்பான விசேட ஆலோசனைக் கூட்டம் கடந்த புதன்கிழமை மாலை 4 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் மேற்கூறியவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போக்குவரத்துத் துறை சார்ந்து பயணம் செய்பவர்களுக்குப் போக்குவரத்துத் துறையினர் உரிய சுகாதார நடைமுறைகளை அறிவுறுத்தி போக்குவரத்துச் சேவைகளை மேற்கொள்வதோடு, பஸ்களின் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாத்திரமே பயணிகளை ஏற்ற வேண்டும் என்பதோடு, பயணம் செய்பவர்கள் முகக் கவசம் அணிவதைப் பஸ்ஸில் சாரதி, நடத்துநர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து சட்ட விரோதமான முறையில் கடல் மார்க்கமாக தலைமன்னார் பகுதிக்கு வந்த 4 நபர்களைக் கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

அவர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொண்ட போது அவர்களில் ஒருவருக்கு கொவிட் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் போது இந்திய மீனவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி வருவதாகத் தகவல்கள் வருவதாகக் குறித்த கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மீனவர்களுக்கு உரிய ஆலோசனைகளையும், விழிப்புணர்வையும் வழங்க ஆலோசித்துள்ளோம். மீனவர்களின் கிராமங்களுக்குச் சென்று கொவிட் தொற்று தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கவும், இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள மிகப் பாரதூரமான சூழலை அவர்களுக்கு தெளிவுபடுத்தி அந்த சூழல் எமது மாவட்டத்தில் ஊடாக இலங்கைக்குள் நுழையாத வகையில் தடுத்து நிறுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

எனவே பொதுமக்கள் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்ற வேண்டும். பொலிஸார் மற்றும் இராணுவத்தின் உதவியுடன் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்குக் கலந்துரையாடி உள்ளோம்.

தற்போது ஏற்பட்டுள்ள மிகவும் ஆபத்தான ஒரு சூழ் நிலையைப் பொதுமக்கள் கருத்தில் கொண்டு சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்ற வேண்டும். மன்னார் மாவட்டம் தற்போதைய சூழ் நிலையில் பாதுகாப்பாக உள்ள போதிலும், நாங்கள் கவனம் இன்றி நடந்து கொண்டால் எதிர்வரும் நாள்களில் நாங்கள் பாரதூரமான நிலையை எதிர் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனச் சுகாதாரத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

எனவே பொது மக்கள் தேவை இல்லாமல் வெளியில் செல்லுதல், பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளவும். குறிப்பாக இந்த காலங்களில் மன்னாரிலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் சுற்றுலாப் பயணங்கள் மேற்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கூடுதலாக ஒன்று கூடுவது, முகக்கவசம் அணியாது பயணம் மேற்கொள்வது போன்ற விடயங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் எமது சமூகத்தைப் பாதுகாக்கத் தனிப்பட்ட ஒவ்வொரு நபரும் இந்த விடயங்களில் கவனம் எடுத்துச் செயல் பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். குறித்த விசேட ஆலோசனைக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், முப்படையினர், அரச தனியார் போக்குவரத்து சங்க பிரதிநிதிகள், பிரதேசச் செயலாளர்கள் மற்றும் துறை சார் திணைக்கள தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வே.வரதசுந்தரம் -

# கோணமலை 07 காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!



கழகப் புலவர் சிவசேகரனார்



**உன்கோயில் சூழ்ந்து**
**உருண்டு உருண்டு வாரார்**
**கண்டிலையோ கண்டிலையோ**
**ஆச்சிநீ காளி!**

**அங்கமெலாம் நோக**
**உருண்டு உருண்டு வாரார்**
**அன்னார்க்கு அபயம்**
**ஆச்சிநீ காளி!**

**மெல்லியர்தம் பாதம்**
**கொப்பளிக்க கொப்பளிக்க**
**அடியழித்தல் கண்டிலையோ**
**ஆச்சிநீ காளி!**

திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் பக்தியில் மூழ்கி, காளி ஆச்சியை இவ்வாறு பாடிக்குதித்த அடியார்கள் திருகோணமலை மண்ணின் மைந்தன் தமிழறிஞன் பெ.பொ.சிவசேகரனார் கண்ட காளி ஆச்சி பற்றி அறிவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

காளி ஆச்சியின் கருணையை என்னென்போம்! அவள் பக்தர்களைத் தேடிச் சென்று அவர்களின் துயர் களைவாள். பக்தர்களின் கனவில் அவள் தோன்றி அவள் செய்யும் காரியங்கள் பலவாகும். பிறநாடுகளில் வாழ்கின்ற திருகோணமலை மக்கள் பலர் இவ்வாறு அம்பாள் பொழியும் இன்னருளை நேரடியாகவும், அஞ்சல் மூலமும் குருக்களுக்கு அறிவிப்பதுண்டு.

கனவில் அவள் தோன்றி அவர்களுக்கு ஆறுதல் அளிப்பாள். தைரியம் ஊட்டுவாள். பக்தர்களுக்காக அவள் பலதேசஞ் செல்வாள். கண்ணுறங்காமல் காளி ஆச்சி தன்னடியார்களைக் காத்தருள்வாள்.

திருகோணமலை ஈன்ற தீந்தமிழ்க் கவிஞன் எனது ஆசிரியப் பெருந்தகை பெ.பொ.சிவசேகரனார். தமிழ் கூறும் நல்லுலகு ம. பொ. சிவஞானக் கிராமணியாரை ம.பொ.சி. என்று அழைக்கும் மரபில் நாம் கழகப் புலவர் சிவசேகரனாரை பெ.பொ.சி. என்று அழைப்பதுண்டு.

எனது ஆசிரியப் பெருந்தகை சிவசேகரனார் தான் பாடியுள்ள காளி கவிமாலையில் திருகோணமலை பத்திரகாளி அம்பாளின் அருட் திறத்தினை ஒலிநயத்துடன், பொருள் நயத்துடனும் பக்திச் சுவை பரவப் பாடியுள்ளார்.

'கனவில் அவள் செய்யும் காரியம் ஒன்றல்ல. கண்ணுறங்காள். தினமும் அவள் போகும் தேசம் பலவாகும். தேடிச் செல்வாள்' என்று அவர் பாடுகிறார். பக்தர்கள் நினைத்த காரியம் செய்து வைப்பாள் காளிஆச்சி. தமது காரியம் சித்திக்க அவர்கள் நேர்ந்து வைப்பார்கள். இழை கட்டுவார்கள். பின்னர் நேர்த்திக் கடனைப் பூர்த்தி செய்வார்கள். பயபக்தியுடன் பெண்கள் அடி அளப்பர். ஆண்கள் அங்கப் பிரதட்சணம் செய்வார்கள். இதனைக் கவிஞர் பெ. பொ.சி. பாடுவதைப் பாருங்கள். 'நேர்ந்து நினைப்பார் இழைகட்டி நிற்பார் நினைந்தபடி ஈந்து மகிழும் இதயத்தாள்'.

இக்கோயில் குருக்களும் அவரது தந்தை யாரும் இறைவிக்கு சாத்துப்படி செய்வது கண்கொள்ளாக் காட்சியாகும். உள்ளம் அப்படியே லயித்துவிடும். அம்பாளுக்கு சந்தனக் காப்பு சாத்தும்போது அது ஒரு தனியழகாகும். இதனைச் 'சந்தனம் பூசி அபிஷேகம் செய்யும் சாம்பவி' - என்று பாடுகிறார் பெ.பொ.சி. அவர்கள்.

மழைக் காட்சியைக் கண்டதும் மணிவாசகப் பெருமானுக்கு இறைவியின் இன்னருள் நினைவுக்கு வருகிறது. மேகம் கடலில் இருந்து முகந்தெடுத்து, இறைவிபோல் கறுத்து, அவள் சிறிய இடையினைப் போல் மின்னி அவள் சுரக்கின்ற இன்னருள்போல் மழை பெய்வதாக மாணிக்கவாசகர் பாடுகிறார்.

**முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்**
**என்னத் திகழ்ந் தெம்மையாளுடையாள் இட்டிடையின்**
**மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்**
**பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ**
**மென்னச் சிலைகுலவி நந்தம்மையாருடையாள்**
**தன்னிற் பிரிவிலா வெங்கோமானென்பர்க்கு**
**முன்னி யவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே**
**என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்!**


கடல்நீரைப் பருகிக் கார்நிறத்தைப் பெறும்மேகம் அம்பாளினை நினைவூட்டுகிறது. 'காராகி எங்கும் கறுத்தெழுந்து' மழைபொழிந்து அம்பாள் சுரக்கும் அருளை என்ன அழகாகப் பாடுகிறார்!

'எங்கும் கலகலவெனச் சொரிந்து நிலத்தைக் குளிர்விக்கும் நின்னருள்' எனப் பாடுவது கண்டு இன்புறுகிறோம். இராமபிரானின் பேரழிகினை வர்ணிக்க முயல்கிறான் கம்பன். இராமரின் நிறமோ கருமை. எனவே, கருமை வண்ணத்திற்கு உவமை தேடுகிறான். கம்பனது கற்பனையில் உதித்த முதல் உவமை மை. எனவே 'மையோ'என்றான்.

ஆனால் அவ்வுவமை கம்பனுக்குத் திருப்தியைத் தரவில்லை. 'மரகதமோ' என்றான். மரகதம் கருமையுடன் பெறுமதியும் உடையது. இருப்பினும் அது இராமனுக்கு ஏற்புடைஉவமையாகக் கம்பனுக்குத் தோன்றவில்லை. இந்த நிலையில் கம்பன் கற்பனையில் பிறிதொரு உவமை தோன்றியது.

பரப்பால் விரிந்ததும், வளம் பலதருவதும் கருமை நிறத்ததுமான மறிகடல் அவர் மனதில் தோன்றிய அடுத்த உவமை. இதுவும் கம்பனுக்குச் சரியெனப்படவில்லை. கம்பனின் கற்பனை சிறகடித்துப் பறந்தது. அழகிய உவமை ஒன்று தோன்றியது. அதுதான் மழைமுகில். இராமனின் கருமையை மட்டுமன்று அது எடுத்துக் காட்டுகின்றது. மழைமுகில் இடத்துக்கிடம் தாவி மழைபெய்கிறது. இராமபிரானின் அருட்திறத்தினை சென்று சென்று அருள் சுரக்கும் பாங்கினை வெளிக்கொணரும் அர்த்தமுள்ள உவமை மழை முகில் எனவே 'மழைமுகிலோ!'என்றான்.





கம்பன் கவிதையில் லயித்துவிடும் பெ.பொ.சி. அவர்கள் அம்பாள் சுரக்கும் அருள் கண்டு அம்பாளை 'மாரித்தாய்' என்று அழைக்கிறார். ஈற்றில் அம்பாளை 'எழில் மாரித் தாய்' என்று ஏத்துகிறார் பெ.பொ.சி. அப்பாடல் இதோ:-

**காராகி விண்ணில் கறுத்தெழுந் தெங்கும்**
**கலகலவென**
**நீராய்ச் சொரிந்து நிலத்தைக் குளிர்விக்கும்**
**நின்னருளை**
**ஏராளர் கூடியெழில் மாரித்தாயென் றிறைஞ்சிநிற்பார்**
**பூராகி விண்ணாகிப் பாலிக்கும் பத்திர காளிகையே!**

கறுத்த மேகம் காய்ந்த நிலத்தைத் தேடி, வாடிய பயிர்களை நாடிச் சென்று மழைபெய்வது போன்று அம்பாள் தனது பக்தர்களைத் தேடிச் சென்று இன்னருள் பொழிவாள் என்ற பொருள் பொதிந்த சொற்றொடர் 'எழில் மாரித்தாய்'.

பெ.பொ. சிவசேகரனார் பாடிய நூறுபாக்களை உடையது காளி கவிமாலை. அவர் அம்பாளிடம் கிறுங்காத நேர்மை கோரிய கவிஞன். அவர் அம்பாளிடம் இறைஞ்சியது என்னவென்று பாருங்கள்:-

**அஞ்சாத நெஞ்சும் அயராதுழைக்கம் அருந்திறமும்**
**நெஞ்சார வாழ்த்தும் பெருநிலையும் ஈயா நீசரிடம்**
**கெஞ்சாத வாழ்வும் கிறுங்காத நேர்மையும்**
**கேட்டுநின்றேன்**
**பஞ்சாட் சரத்தில் ஒளிவீசும் பத்திரகாளிகையே!**

காளிஆச்சி மீது அன்புருகிக் கட்டளைக் கலித்துறை யாப்பில் நூறு பாடல்களைப் பாடியுள்ளார் பெ.பொ.சி. படிப்பவர் மனதில் பக்தி உண்டாகும். மனம் கரையும். அழுதழுது பாடியுள்ளார். இப்பாடல்களை நாள்தோறும் பயபக்தியுடன் பாடினால் எமதுள்ளம் தேவியுறையும் வாசஸ்தலம் ஆகிவிடும் என்று உறுதி கூறுகிறார்.

எனது தமிழ் ஆசான் பெருந்தகை சிவசேகரனார் தனது 'காளிகவிமாலை' பிறந்தகதையைக் கூறுகிறார். இதோ:-

'காளி கவிமாலை'என்னுடைய பாடல்கள் என்று யாரும் நினைத்துவிடக் கூடாது. நான் கருவி மாத்திரமே. பத்திரகாளி அம்பாள் மீது நான் கொண்டிருக்கும் அளவு கடந்த காதலே இப்பாடல் தோன்றுவதற்குக் காரணமாகும்.

அம்பாளிடத்து நான் வைத்திருக்கும் காதல் பாட்டாக உருவெடுப்பதற்குக் காரணமாக இருந்தவர் ஐயா அவர்கள். அவர் வேறு யாருமல்லர். திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தாவும் காளி உபாசகருமாகிய பிரம்மஸ்ரீ சு.கு.சோமஸ்கந்த ஐயர் அவர்களே. ஐயா அவர்களும், அவர் மைந்தன் என் அன்புக்குரிய மாணவன் பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரன் அவர்களும் தான. இக் 'காளிகவிமாலை' நிறைவேற்றுவதற்கு என்னைக் காணும் போதெல்லாம் தூண்டி நின்று, ஊக்கம் அளித்தவர்கள் ஆவர். அவர்களை நான் ஒரு போதும் மறக்க முடியாதபடி அவர்கள் என்னுள்ளத்தில் இடம் பெற்றுவிட்டார்கள். அவர்களுக்கு என் ஆழ்ந்த நன்றி.

இப்பாடல்கள் சித்தார்த்தி வருடம் தைமாதம் 23 ஆம் நாள் (6.2.80) அருள்மிகு பத்திரகாளி அம்பாள் புனராவர்த்தன சம்புரோண மகாகும்பாபிஷேகம் நிகழ்ந்தபோது நிறைவெய்தியது. இக் 'காளி கவிமாலை'யில் நூறு பாடல்கள் உள்ளன. முழுவதும் கட்டளை கலித்துறை யாப்பில் அமைந்தவை. கவிதை யாவும் அம்பாள் புகழ் பேசுபவை. பாடிவந்தால் உள்ளந் தூய்மையாகி தேவி உறையும் வாசஸ்தலம் ஆகிவிடும். உங்களால் முடிந்த அளவுக்கு ஒற்றையோ, பலவற்றையோ அல்லது முழுவதையுமோ மனப்பாடம் ஆக்கிவைத்துக் கொள்ளுங்கள். நினைவுவரும் போதெல்லாம் பாடிமகிழுங்கள். அதுவே போதும்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# கொவிட் நிலைமையை கட்டுப்படுத்த இரண்டு மாத காலம் தேவைப்படும்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 30

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொவிட் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு இரண்டு மாதங்களுக்கும் அதிக காலம் தேவைப்படும். எவ்வாறிருப்பினும் நாளொன்றுக்கு ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டாலும் அனைவருக்கும் சிகிச்சையளிக்க வைத்தியத்துறை உள்ளிட்ட தரப்புக்கள் தயாராகவுள்ளன என்று இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாட்டில் தற்போதுள்ள கொவிட் நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போது இதனைக் கூறிய இராணுவத்தளபதி மேலும் குறிப்பிடுகையில் -

நாளொன்றுக்கு 1,000 இற்கும் அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தற்போது 7 ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வெவ்வேறு நாடுகளில் தொற்றாளர்களுக்கு எவ்வாறு சிகிச்சையளிக்கப்படுகிறது என்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் தற்போதைய நிலைமையைக் கட்டுப்படுத்த இரண்டு மாதங்களுக்கும் அதிக காலம் தேவைப்படும். மேலும் பல தொற்றாளர்கள் அடுத்த இரு வாரங்களிலேயே இனங்காணப்படுவர்.

தற்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படுகிறது. இவர்கள் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்களாவர்.

தற்போதைய நிலைவரம் தொடர்பில் விசேட வைத்திய நிபுணர்கள், பிரதான வைத்தியசாலைகளிலுள்ள வைத்தியர்களுடன் கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தீவிர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் சாதாரண சிகிச்சைகளை எவ்வாறு அதிகரிப்பது என்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே மேலும் சிகிச்சை வசதிகளை அதிகரிக்க வேண்டிய தேவையுடைய வைத்தியசாலைகள் எவை என்பது தொடர்பில் அறியத்தருமாறு வைத்தியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தினமும் ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டாலும் அவர்களுக்கான சிகிச்சையளிக்க சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்படும் பகுதிகள் உடன் அமுலாகும் வகையில் தனிமைப்படுத்தப்படுகின்றன.



எனவே மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும். செயற்திட்டங்களை எம்மால் அறிமுகப் படுத்தவும் நடைமுறைப்படுத்தவும் முடியும். ஆனால் மக்களின் ஒத்துழைப்புடனேயே வைரஸ் பரவலை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும்.

வைத்தியசாலைகளில் குறைபாடுகள் காணப்பட்டால் மேலும் 10 ஆயிரம் சிகிச்சை படுக்கைகளை வழங்குவதற்கும் நாம் தயாராகவுள்ளோம்.

இலங்கையில் இராணுவம் உள்ளிட்ட முப்படையில் சிரேஷ்ட மருத்துவப் பிரிவு காணப்படுகிறது. எனவே எவ்வாறான நெருக்கடி நிலைமை ஏற்பட்டாலும் நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க முப்படை தயாராகவுள்ளது. - என்றார்.

# 18 லீற்றர் ஹைப்ரிட் பிரிமியர் எரிவாயு சந்தைக்கு அறிமுகப்படுத்த அனுமதி

வாடிக்கையாளர்களின் விழிப்புணர்வுக்கு உட்பட்டு 18 லீற்றர் ஹைப்ரிட் பிரிமியர் எரிவாயு சிலிண்டரை புதிய உற்பத்தியாக சந்தைக்கு அறிமுகப்படுத்த லிட்ரோ எரிவாயு நிறுவனத்துக்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும், நுகர்வோரின் அன்றாடத் தேவைகளுக்கு எந்தவித பற்றாக்குறையும் இல்லாமல் 12.5 கிலோ எரிவாயு சிலிண்டரை சந்தைக்கு வெளியிட லிட்ரோ எரிவாயு நிறுவனம் உறுதியளித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரை 1,493 ரூபாவுக்கு வாடிக்கையாளர்களின் விருப்பப்படி குறித்த முகவர்கள் ஊடாக பெற்றுக் கொடுக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, 18 லீற்றர் ஹைப்ரிட் பிரிமியர் எரிவாயு சிலிண்டரை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதாயின், புதிய உற்பத்தியின் செயல்திறன், அந்த சிலிண்டரில் உள்ள வாயுவின் அளவு மற்றும் விலை, தற்போது சந்தையில் உள்ள சிலிண்டர்களிடமிருந்து அந்த சிலிண்டரை வேறுபடுத்தி அறியக்கூடிய தன்மை, குறித்த விடயங்கள் முழுமைப்படுத்தப்பட வேண்டும்.

அதன்படி, சந்தையில் இருந்து வழமையான 12.5 கிலோ எரிவாயு சிலிண்டரை கொள்வனவு செய்ய முடியாவிட்டால் 1977 இலக்கத்துக்கு அழைத்து தெரிவிக்குமாறு நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

சூழல் பாதுகாப்பு என்பது உலகில் இன்று முக்கிய இடத்தை வகிக்கின்றது. இதற்கமைவாக சூழல் தொடர்பாக உலக நாடுகள் பலவும் கூடுதலான கவனத்தை செலுத்தியுள்ள மையுடன் மாத்திரமன்றி கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டுவருகின்றன என்றும் அமைச்சர் கூறினார்.

கிருமிநாசினி பயன்பாடு மற்றும் இறக்குமதிக்குத் தடையை விதித்தல், மீள் புதுப்பிக்கத்தக்கசக்திவளத் திட்டங்களைவிரைவுபடுத்தல் வனமேம்பாட்டு வேலைத்திட்டங்களும் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன என்றும் அமைச்சர் கூறினார்.

# சீனப் பாதுகாப்பு அமைச்சரின் வருகை; பின்னணி என்ன என பொன்சேகா கேள்வி



இலங்கையின் பாதுகாப்பு படைகள் சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளில் பயிற்சிகளைப் பெறுகின்றன.

அவ்வாறானதொரு புறச் சூழலில் அந்த நாடுகளின் பாதுகாப்பு துறைசார் அதிகாரிகள் நட்பு நாடுகளுக்கு விஜயம் செய்வது பொதுவானதொரு விடயமாகும்.

ஆனால் சீனப் பாதுகாப்பு அமைச்சரின் வருகையின் பின்னணியில் உள்ள முக்கியத்துவம் தொடர்பாக எமக்கு பிரச்சினைகள் காணப்படுகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

அமெரிக்கா போன்ற நாடுகளிலுள்ள பாதுகாப்பு அமைச்சர் மற்றும் இராணுவத் தளபதி உள்ளிட்ட பாதுகாப்பு பிரதானிகள் உள்நாட்டுப் பாதுகாப்பை உலக பாதுகாப்புடன் தொடர்புடையவர்களாவர்.

அமெரிக்க இராணுவத் தளபதி கூட இலங்கைக்கு விஜயம் செய்ததில்லை. அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் வருவதானாலும் இரண்டாம், மூன்றாம் நிலையிலுள்ளவர்களே விஜயம் செய்வார்கள். - என்றார் .

# எவன்கார்ட் வழக்கு தீர்ப்பு மே மாதம் 21

எவன்கார்ட் நிறுவன மிதக்கும் ஆயுத களஞ்சியசாலை வழக்கு தொடர்பான தீர்ப்பு மே மாதம் 21ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு விசேட நீதாய நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆதித்ய பட்டபெதிகே, மஞ்சுல திலகரத்ன மற்றும் மஹேன் வீரமன் ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

# நிரம்பி வழிகின்றது தீவிர சிகிச்சைப்பிரிவு

## பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவிப்பு

கொவிட் தொற்றாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகள் கொவிட் நோயாளர்களால் நிரம்பியுள்ளன என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

கொவிட் தொற்றாளர்களுக்காக இதுவரை பயன்படுத்தப்படாத வைத்தியசாலைகளின் தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகளைப் பயன்படுத்தி நிலைமையை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மத்திய கொழும்பு அரச வைத்தியசாலையில் கொவிட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்கலை கண்காணிப்பதற்காக சென்ற சந்தர்ப்பத்தில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போது இதனைத் தெரிவித்தார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## உளுந்தின் பயன்கள்



கடுமையான மற்றும் கொடிய நோயின் தாக்கத்திலிருந்து விடுபட்டவர்கள் உளுந்தை களியாகவோ, கஞ்சியாகவோ அல்லது அரிசி சேர்த்து அரைத்து வேகவைத்து உணவாக உண்டு வந்தால் தேகம் வலுப்பெறும், எலும்பு, தசை, நரம்புகளின் ஊட்டத்திற்கு நல்லது.

உளுந்துடன் தவிடு நீக்காத பச்சரிசி, சுக்கு, வெந்தயம் சேர்த்து அரைத்து களி செய்து பனைவெல்லத்துடன் கலந்து சாப்பிட்டு வந்தால் உடல் சூடு தணியும்.

உளுந்து வடை பசியைப் போக்குவதுடன் உடலுக்கு குளிர்ச்சியைத் தரும். பித்தத்தைக் குறைக்கும் தன்மை கொண்டது.

சிறு குழந்தைகளுக்கு உளுந்து சேர்ந்த இட்லி கொடுப்பது நல்லது. அவை குழந்தையின் வளர்ச்சியில் முக்கிய பங்கெடுக்கும். மேலும் எலும்புகள் வலுப்பெறும்.

நாற்பது வயதைக் கடந்த பெண்களுக்கும், பருவம் அடைந்த பெண்களுக்கும் கண்டிப்பாக ஊட்டச்சத்து அதிகம் தேவை. உளுந்தை கஞ்சியாக செய்து கொடுத்து வந்தால் உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

உளுந்து ஊற வைத்த நீரை மறுநாள் அதிகாலை அருந்தி வர சிறுநீர் சம்பந்தமான பிரச்சினைகள் சரியாகும்.

4 தேக்கரண்டி உளுந்து மற்றும் 2 தேக்கரண்டி வெந்தயம் சேர்த்து அரைத்து பேஸ்ட் செய்து தலையில் தேய்த்து குளித்து வந்தால் பொடுகு தொல்லை தீரும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார வழிமுறைகளை பின்பற்றினால் நாட்டை முடக்கும் அவசியம் இருக்காது

## விசேட வைத்திய நிபுணர் பாலித்த தெரிவிப்பு



சுகாதார வழிமுறைகளைப் பொது மக்கள் பின்பற்றி நடந்தால் நாட்டை முழுமையாக முடக்குவதற்கான அவசியம் இருக்காது என உலக சுகாதார நிறுவன பணிப்பாளர் நாயகத்தின் கொவிட் 19 தொடர்பான தென் கிழக்காசிய வலயத்துக்கான சிறப்புத் தூதர், விசேட வைத்திய நிபுணர் பாலித்த அபேகோன் தெரிவித்தார்.

உலகெங்கிலும் கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்றால் நாளுக்கு நாள் பொது மக்கள் பலரும் பாதிப்படைந்து வருகின்றனர். இதனைத் தடுப்பற்காக ஒவ்வொரு நாடுகளும் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன என அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

'ஏனைய நாடுகளைக் காட்டிலும் எமது நாட்டில் ஏற்பட்டுள்ள மரணங்களின் எண்ணிக்கையைக் குறைவாக வைத்துக்கொள்வதற்கு எமது சுகாதாரத் துறையினரால் முடிந்துள்ளது.

எமது வைத்திய கட்டமைப்பு சிறப்பான நிலையில் காணப்படுவதாலேயே இது சாத்தியமானது. எனினும், இது எந்த நேரத்திலாவது கீழே விழக்கூடும்.

நாம் தொடர்ந்தும் சுகாதார வழிமுறைகளைப் பேணுகின்றமையால் கொரோனாத் தொற்றால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ளலாம்.

அதனைத் தடுப்பதற்கு மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும். நாம் கவனக் குறைவாக இருந்தோமானால், இரண்டு அல்லது மூன்று வாரங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும். பொதுக் கூட்டங்கள் நடத்துவதைத் தவிர்த்துள்ளமை, வேலையாள்களின் எண்ணிக்கையை குறைத்துள்ளமை, பாடசாலை மூடப்பட்டுள்ளமை போன்ற விடயங்களால் கொரோனாத் தொற்று மேலும் பரவுவதைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது.

மேலும், பொது மக்கள் சுகாதார வழிமுறைகளைத் தொடர்ந்தும் அவதானத்துடன் கடைப்பிடித்தால் நாட்டை முழுமையாக முடக்கப்படுவதற்கான அவசியம் இருக்காது. எனினும், தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள பிரதேசங்களை முடக்குவது அவசியமாகும்.' - என்றார்.

# தனிமைப்படுத்தலை மீறினால் அபராதம், சிறைத் தண்டனை!

கொழும்பு, ஏப். 30

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்படும் நபர்களுக்கு எதிராக 10 ஆயிரம் ரூபா அபராதமும், ஆறு மாதகால சிறைத்தண்டனையும் வழங்கப்படும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்குப் புறம்பாக செயற்படும் நபர்கள் தொடர்பில் பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இதன்போது முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியைப் பேணுதல் போன்ற சட்டவிதிகளை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்குப் புறம்பாகச் செயற்பட்டனர் என கடந்த புதன்கிழமை காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்துக்குள் 145 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மொனராகலை, திருகோணமலை மற்றும் களுத்துறை ஆகிய பகுதிகளிலே அதிகமானவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை உள்ளிட்ட தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்குப் புறம்பாகச் செயற்படும் நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையுடன், அதற்கமைய இதுவரையில் 4 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொவிட் - 19 வைரஸ் பரவல் காரணமாகதற்போது முடக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் அத்தியாவசிய தேவையின்றி, அங்கிருந்து வெளியேற முடியாது. அதேபோன்று வெளிப் பிரதேசங்களில் இருப்பவர்கள் அந்தப் பகுதிகளுக்கு உட்பிரவேசிக்க முடியாது.

அவ்வாறு செயற்படும் நபர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு சட்டவிதிகளுக்கு கீழ் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அத்தகைய நபர்கள் தொடர்பில் பொலிஸார் சீருடை மற்றும் சிவில் உடையில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள். - என்றார்.

# ரயில்வேத் தண்டவாளத்துக்கு பயன்படும் இரும்புகள் திருட்டு



மட்டக்களப்பு, ஏப். 30

மட்டக்களப்பு - கொழும்பு ரயில் தண்டவாளத்தின் இரும்புகள் திருடப்பட்ட சம்பவமொன்று கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாகனேரி பகுதியில் அமைந்துள்ள ரயில் பாதையின் இரும்புகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

காவத்தமுனை பகுதியைச் சேர்ந்த நபரொருவர் அந்தப் பகுதியால் தனது வயல் பகுதிக்குச் சென்று கொண்டிருந்த போது இருபது வயது மதிக்கத்தக்க இரு இளைஞர்கள் தண்டவாளத்தில் பொருத்தப்பட்டிருந்த இரும்புகளைத் திருடுகின்றமையைக் கண்டுள்ளார்.

குறித்த நபரை கண்டதும் இரு இளைஞர்களும் திருடிய இரும்புகளைக் கைவிட்டுவிட்டு காட்டுவழியே தப்பியோடியுள்ளனர்.

இந்நிலையில், திருடப்பட்ட இரும்புகளை மேற்படி நபர் எடுத்து அருகிலுள்ள புணானை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பாக புணானை ரயில் நிலையத்துக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வரும் நிலையில் இரு இளைஞர்களையும் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்று அந்நபர் தெரிவித்துள்ளார்.

# தனிமைப்படுத்தலை மீறிய 187 பேர் கைதாகினர்

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக 24 மணிநேரத்தில் மேலும் 187 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் 31முதல் மேற்படி குற்றச்சாட்டுக்காக இதுவரையான காலப் பகுதியில் நாடு முழுவதும் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த புதன்கிழமை பொலிஸார் நடத்தப்பட்ட சிறப்பு சோதனையில் 1,240 ஓட்டோக்கள் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி செயற்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது. மொத்தமாக 6 ஆயிரத்து 110 ஓட்டோக்கள் பரிசோதிக்கப்பட்டன.

இவற்றுள் பெரும்பலானா ஓட்டோக்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையையும் விட அதிகளவிலான பயணிகளை ஏற்றிச் செல்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது எனப் பொலிஸார் கூறினார்.

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறும் நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளியாக காணப்பட்டால் 6 மாத கால சிறைத் தண்டனை மற்றும் 10,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இதனால் சுகாதார வழிகாட்டி ஆலோசனைகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும் என்று பொது மக்களை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொவிட் அனர்த்தத்தின் காரணமாக ஏதேனும் பிரதேசம் தனிமைப்படுத்தப்பட்டிருக்குமாயின் சம்பந்தப்பட்ட பிரதேச மக்கள் அதே பிரதேசத்தில் தங்கியிருக்க வேண்டும். அதேபோன்று வெளி நபர்கள் இந்த பிரதேசத்திற்குள் பிரவேசிப்பதற்குத் தடை என்றும் அவர் குறிப்பிட்டார்.

# 5 வயது சிறுமி ஒருவர் நீரில் மூழ்கி பரிதாப பலி

பொலன்னறுவை இஸட் டீ கால்வாயில் நீராடச் சென்ற 5 வயதுச் சிறுமி நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி கயிற்றின் உதவியுடன் கடந்த செவ்வாய்க்கிழமை ஆற்றில் நீராடிக்கொண்டிருந்த வேளையில் கயிறு கைநழுவியதன் காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீரில் அடித்துச்சென்ற சிறுமியை பிரதேசவாசிகள் காப்பாற்றி வைத்தியசாலையில் அனுமதிக்கும் வேளையில் அவர் உயிரிழந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொய்ச் செய்தி வெளியிட்ட தொலைக்காட்சி நிறுவனத்துக்கு அமைச்சர் டக்ளஸ் 50 கோடி ரூபா கோரி மானநஷ்ட கடிதம்!

நற்பெயருக்கும் கௌரவத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பொய்யான செய்தியை வெளியிட்ட தனியார் தொலைக்காட்சி நிறுவனத்திடம் இருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் 50 கோடி ரூபா நஷ்ட ஈடு கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதம் தொடர்பாகத் தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமையாளருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சட்டத்தரணியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொய்யாகப் புனையப்பட்ட செய்தி ஒன்று கடந்த 12.03.2021 அன்று குறித்த தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தால் ஒளிபரப்பப்பட்டுள்ளது.

குறித்த செய்தியில், கிளிநொச்சி மாவட்டத்தில் வீட்டுத் திட்டப் பயனாளர் தெரிவில் முறைகேடு இடம்பெற்று இருப்பதாகவும், குறித்த முறைகேட்டில் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்டிருக்கின்றார் எனவும், பொய்யாகப் புனையப்பட்ட செய்தியை வெளியிட்டிருந்தது.

இந்த செய்தி தீயநோக்கத்துடன் வெளியிடப்பட்டுள்ளதாகவும், அதன் மூலம் தனக்கு அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்து தனது சட்டத்தரணி மூலம் கடற்றொழில் அமைச்சரால் கோரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் குறித்த தொலைக்காட்சி ஒளிபரப்புச் செய்த செய்தியால் ஏற்படுத்தப்பட்ட அவமானத்துக்கான



நஷ்ட ஈடாக ரூபா 50 கோடி ரூபா பணத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு அடுத்த இரு வாரங்களுக்குள் செலுத்த வேண்டும் என் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அவ்வாறு நஷ்ட ஈட்டை செலுத்தத் தவறும் பட்சத்தில் நீதிமன்ற நடவடிக்கை ஊடாகக் குறித்த நஷ்ட ஈட்டைப் பெற்றுக்கொள்வதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# P2P எழுச்சிப் பேரணி வழக்கை நீதிவான் மன்று விசாரிக்கத் தடை

## மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுத்தது சுமந்திரனின் சட்ட வாதத்தை அடுத்து

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 29

**நீதிமன்றம் விதித்த தடை உத்தரவையும் மீறி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியை முன்னெடுத்தமை மூலம் நீதிமன்றத்தை அவமதித்தனர் எனத் தெரிவிக்கும் வழக்கை கல்முனை நீதிவான் நீதிமன்றம் நடத்துவதற்கும் அது தொடர்பாக ஏதேனும் கட்டளை பிறப்பிப்பதற்கும் எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக் காலத் தடைக் கட்டளை பிறப்பித்துள்ளது.**

பேரணிக்கு நீதிவான் நீதிமன்றம் தடை விதித்த நிலையில் பேரணியில் பங்கு கொண்டு நீதிமன்றை அவமதித்தனர் எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 07 பேருக்கு எதிரான வழக்கு நாளை வெள்ளிக்கிழமை கல்முனை நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட விருந்த நிலையில் –

அந்த 07 பேருக்கும் அழைப்பாணை விடுத்துள்ள நீதிமன்றம் இன்று அவர்கள் நீதிமன்றத்தில் பிரசன்னமாகும் போது அவர்களுக்கு எதிராகக் கைது உத்தரவும், தொடர்ந்து பிணை அனுமதியும் வழங்கலாம் என எதிர்பார்க்கப்பட்ட பின்புலத்தில் –

நீதிவான் நீதிமன்றம் இந்த விடயத்தில் எத்தகைய புதிய உத்தரவை விடுப் பதற்கும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை இடைக்காலத் தடை விதித்து இன்று வியாழக்கிழமை கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் இடைக் காலத் தடைக்கட்டளை பிறப்பிக்கப் பட்டிருக்கின்றது.

இவ்விடயத்தை ஒட்டி இடைக்காலத் தடை விதிக்கக் கோரி மேன் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு தொடர்பில் இன்றையதினம் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி நிரான் அங்கிற்றல் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகித் தங்கள் தரப்பு வாதங்களை முன்வைத் தனர்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரிக்கும் நியாயாதிக்கம் நீதிவான் நீதிமன்றுக்குக் கிடையாது என்று தெளிவுபடுத்தினார் சட்டத்தரணி சுமந்திரன்.

இதனை ஏற்ற மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசர் அர்ச்சுனா ஒபயசேகர மற்றும் நீதியரசர் மாயதுன்ன கொரய ஆகியோர் மேற்படி கட்டளையை வழங்கினர்.

கல்முனை நீதிவான் நீதிமன்றில் நாளை இடம்பெறவுள்ள வழக்குத் தொடர் பில் உத்தரவு ஏதும் பிறப்பிக்க எதிர்வரும் 18ஆம் திகதி வரை இடைக்கால தடை விதித்த நீதியரசர்கள், எதிராளிகளுக்கு நோட்டீஸ் வழங்குமாறும், நாளைய தினம் கல்முனையில் வழக்கு என்பத னால் இன்றைய தினமே மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் கல்முனை நீதிவான் நீதிமன்றின் பதிவாளருக்கு இந்த இடைக்காலத் தடைக் கட்டளையை தொலைபேசி ஊடாகவும், தொலை நகல் மூலமும் அனுப்பி வைக்குமாறு கட்டளையிட்டனர்.

மேற்படி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணிக்கு எதிராகத் தடை உத்தரவு விதித்த கல்முனை முன்னாள் நீதிவான், கல்முனை தற்போதைய நீதிவான், சட்டமாஅதிபர் ஆகியோர் இந்தமனுவில்எதிர்மனுதாரர்களாகக்குறிப்பிடப்பட்டுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராசமாணிக்கம் சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம், த.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந் திரன், சீ.யோகேஸ்வரன் உட்பட 07 பேருக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கே நாளை கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டவிருந்தது.

## கடந்த 8 நாள்களில் மாத்திரம் 7,481 பேருக்குக் கொரோனா

இலங்கையில் கடந்த 8 நாள்களில் மாத்திரம் 7 ஆயிரத்து 481பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

நேற்று இரண்டாவது நாளாகவும் ஆயிரத் துக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இந்தத் திடீர் அதிக ரிப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ் – சிங்களப் புத்தாண்டு விடுமுறைக் காலத்தின் பின்னர் கொரோனாத் தொற் றாளர்களின் தொகை சடுதியாக அதிகரித்துவரும் நிலையில் தற்போது 9 ஆயிரத்து 209 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## நாட்டில் எந்தவொரு பகுதியும் முன் அறிவிப்பின்றி முடங்கும்

### இராணுவத் தளபதி எச்சரிக்கை

இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகமாக அடையாளம் காணப்படும் பொலிஸ் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் ஆகிய எவ்வித முன்னறிவித்தலுமின்றி முடக்கப்படும்.

– இவ்வாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

எனவே, இந்த நிலைக்கு முகம் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும் எனவும் அவர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இதற்கு முன்னர் முன்னறிவித்தல் வழங் கப்பட்டு பிரதேசங்கள் முடக்கப்பட்டன. ஆனால், தற்போதைய தொற்று அதிகரிப்பின் காரணமாக எவ்வித அறிவிப்பும் இன்றி முடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், நாட்டை முழுமையாக முடக்க எதிர்பார்க்கவில்லை.

நாட்டு மக்கள் இன்று பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளனர். இது தொடர்பில் பொதுமக்களுக்குப் பலமுறை அறிவுறுத்திய போதும், சரியான சுகாதார ஆலோசனையைப் பின்பற்றாததால் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனிடையே, எதிர்வரும் இரண்டு, மூன்று வாரங்களில் நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை தற்போதை விட அதிகரிக்க வாய்ப்பு இருக்கின்றது.

இலங்கையில் கடந்த இரண்டு நாள் களாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் – என்றார்.

## நாட்டை முற்றாக முடக்கினால் வீழ்ந்துவிடும் பொருளாதாரம்!

### பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 29

நாட்டை முழுமையாக முடக்குவதற்கு எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை. ஆனால், கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்படும் பிரதேசங்கள் முடக்கப்படும்.

– இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ண தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொரோனா வைரஸ் தொற்று நிலை மையில் நாட்டை முழுமையாக முடக்கினால் பொருளாதார ரீதியில் நாடு வீழ்ந்து விடும். இதனால் நாட்டை முடக்காது கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கவே அரசு முயற்சிக்கும்.

இதேவேளை, வைத்தியசாலைகளில் ஏற்படக்கூடிய இடப்பற்றாக்குறையைக் கருத்தில்கொண்டு இராணுவத்தால் 1,500 கட்டில்களைக் கொண்ட சிகிச்சை நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. – என்றார்.

## கொரோனாவால் சிக்கித் தவிக்கும் இந்தியா: ஆறுதல் தெரிவித்து மோடிக்கு கோட்டா கடிதம்

இந்தியாவில் தற்போது நிலவும் கொரோனா வைரஸ் நெருக்கடி தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மிகுந்த வேதனையையும், கவலையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ள கூட்டொருமைப்பாடு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

முன்னொருபோதும் இல்லாத வகையில் தற்போது ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடி நிலையை வெற்றிகொள் வதில் மனித சமுதாயத்தின் ஒட்டுமொத்த முயற்சிகள் பாரிய பங்களிப்பை வழங்குகின்றன.

அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் நிபுணர்களின் ஆதரவுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமைத்துவத்தின் கீழ் இந்தியா இந்த நெருக்கடியை வினைத்திறன் மிக்கவகையில் வெற்றிகொள்ளும்.



இந்திய மக்களின் நலனுக்காக இலங்கையில் உள்ள பௌத்த மத குருமார்கள்ரத்னசூத்ராபிராத்தனை ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருக் கின்றோம்.

ஜனதிபதியினதும் பௌத்த குருமார்களதும் இந்த இதயபூர்வமான செயற்பாடானது இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான புராதன மற்றும் நெருக்கமான உறவின் ஆழத்தையும் பலத்தையும் பிரதிபலிப்பதாக அமைகின்றது.

திட்டமிட்ட காலப்பகுதிக்கு முன்னதாகவே இலங்கையில் முதலாவது தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டத்தை இலங்கை அரசு ஆரம்பிப்பதற்கு ஏதுவாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 5 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகளைப் பரிசாக வழங்கியமைக் காக இலங்கை மக்கள் சார்பில் நன்றியைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

கொரோனாப் பெருநோயால் மேலெ ழுந்திருக்கும் பாரிய சவால்களை எதிர் கொள்வதில் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் பரஸ்பரம் ஒத்துழைப்புடன் செயற்பட்டுள்ளன.

இந்த விடயத்தில், இரு நாட்டு மக்க ளினது நலன்கள் மற்றும் சகோதரத்துவ ரீதியானதும் நாகரிக ரீதியானதுமான உறவுகள் ஆகிய–வற்றை மேலும் வலு வாக்கும் நெருக்கமான நட்புறவைச் சார்ந்ததாக இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு காணப்படுகின்றது – என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்

## இராதாகிருஷ்ணன் வலியுறுத்தல்



மாகாணசபைத் தேர்தலை நடத்தத் தயார் என்று அரசாங்கம் கூறினாலும் , ஆளுங் கட்சிக்குள்ளேயே இதில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. எத் தகைய சிக்கல் காணப் பட்டாலும் இந்தியாவிற்கு வழங்கியுள்ள வாக்குறுதிக்கமைய மாகாணசபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்பட வேண்டும். எதிர்க்கட்சி என்ற ரீதியில் தொடர்ச்சியாக இதனை நாம் வலியு றுத்துவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத் தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என்று கூறுகின்ற போதிலும், அதனை எந்த முறைமையில் நடத்துவது என்பது அரசாங்கத்துக்கு பெரும் பிரச்சி னையாகக் காணப்படுகிறது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுகிறதா என்ற சந்தேகம் எழுகிறது.

இந்தியாவிற்கு அளித்துள்ள உறுதியை நிறைவேற்றும் வகையிலும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் மாகாணசபை விவகாரத்தில் தீர்க்கமானதொரு முடிவை அரசாங்கம் வழங்க வேண்டும். ஆனால் உண்மையில் தேர்தல் நடத்தப்படுமா என்று உறுதியாகக் கூற முடியாது.

மாகாணசபைத் தேர்தல் துரிதமாக நடத்தப்பட வேண்டும் என்று இந்தியா பல சந்தர்ப்பங் களில் அழுத்தம் பிரயோகித்துள்ளது. ஆனால் கொவிட் நிலைமையைக் கார ணம் காட்டி எதையுமே செய்ய முடியாது என்ற நிலையை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட், எண்ணெய் இறக்குமதி, உரம் உள்ளிட்ட சகல விடயங்களிலும் அர சாங்கத்தின் வீழ்ச்சி வெளிப் பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டுள்ளமை, ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரைக் கைது செய்வதற்கு முயற்சிக்கப்படுகின்றமை யாரேனுமொருவரை திருப்திப்படுத்துவதற்கான செயற்பாடுகளா என்ற சந்தேகம் எழுகிறது.

நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப் படாமல் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப் பட்டுள்ளமை தவறு. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு கைது செய்யப்படுகின்றமை ஜனநாயகத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. இது பிழையான முடிவாகும். எதிர்காலத்தில் மீண்டும் இது போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாமலிருக்க ஜனநாய கம் பாதுகாக்கப்பட வேண்டும். – என்றார்.

# பிரித்தானியாவை போன்று இலங்கையில் பாரிய நெருக்கடிகள் ஏற்படும் அபாயம்

நாட்டில் பரவும் கொவிட் மரபணு முன்னரை விடவும் ஆபத்தானது என்பதால் மக்கள் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவது கட்டாயமாகும். அவ்வாறில்லை என்றால் நிலைமை மோசமடையும் என சுகாதாரப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

தற்போது வேகமாகப் பரவும் வைரஸ், கடந்த காலங்களில் பிரித்தானியாவில் பரவி பாரிய உயிரிழப்புகளை ஏற்படுத்தியதென உறுதி செய்யப்பட்டுள்ளது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வைத்தியர் சந்திம ஜீவன்தர தெரிவித்துள்ளார்.

கொழும்பு, பொரலஸ்கமுவ மற்றும் குருநாகல் பிரதேசங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மாதிரிகளின் பின்னர் இந்த விடயம் உறுதி செய்யப்பபட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எப்படியிருப்பினும் முதலாவது, இரண்டாவது அலையை விடவும் அபாயமானதெனவும், அந்த மரபணு இலங்கை முழுவதும் ஏப்ரல் மாதத்தில் பரவியுள்ளது. இவ்வாறு புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட புதிய மரபணு மற்றும் இதற்கு முன்னர் பரவிய மரபணுவின் அறிகுறிகளுடன் தொடர்புடையதாகும்.

இதற்கு முன்னர் நோய் அறிகுறிகளாகக் காய்ச்சல், இருமல், சுவாசப் பிரச்சினை காணப்பட்டது, புதிய மரபணுவில் உடல் வலி, தலைவலி, வாசனை தெரியாமை போன்ற விடயங்கள் காணப்படும் என வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன் இந்த புதிய மரபணு காரணமாக ஏற்படும் மரணங்கள் 55 வீதம் அதிகம் எனவும் மக்களுக்கு இடையில் 50 வீதம் அதிகமாகப் பரவும் எனவும் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய மாறுபாடு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி முதலில் ஏற்பட்டது. இது பரவினால் உயிரிழந்து விடுவோம் என்ற எண்ணமே எல்லோரிடமும் காணப்பட்டது. அது பரவியவுடன் சுகாதாரப் பிரிவுகளிடம் தெளிவுபடுத்தினோம். எனினும் 8 பேரிடம் மாத்திரம் காணப்பட்ட அந்த மரபணு மாறிய கொரோனா எல்லோரிடமும் எப்படிப் பரவியது என்பது தெரியவில்லை.

எனினும் தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் சிறப்பாக உள்ளதென ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வைத்தியர் சந்திம ஜீவன்தர தெரிவித்துள்ளார்.

## அவசர நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகரித்து, அவசரகால நிலை ஏற்பட்டால் அதை எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளோம் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை ,1544 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதுவரை 19 உயிரிழப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் கடந்த வாரம் யாழ். மாவட்ட நிலைமையை ஆராய்ந்து ஒரு சில நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம்.

இதற்கு மேலதிகமாக ஆளுநர் தலைமையில் விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இதனடிப்படையில் தேசிய ரீதியில் மற்றும் கொரோனா தடுப்புச் செயலணியின் விதிமுறைகளுக்கு அமைய தற்போதுள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு வடக்கு மாகாணத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. அதேபோன்று யாழ். மாவட்ட நிலைமை தொடர்பிலும் ஆராயப்பட்டது.

சுகாதார வழிமுறைகளை அமுல்படுத்துவதில் உள்ள இடர்பாடுகள், பிரச்சினைகள் தொடர்பில் பேசப்பட்டது.

தனிமைப்படுத்தல் நிலையங்களை தேவைக்கேற்ப அதிகரிப்பதற்குரிய விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

சுகாதார அமைச்சு, கொரோனா மத்திய நிலையத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வழிகாட்டல்களைத் தொடர்ச்சியாகப் பின்பற்றுதல், அதனை மாவட்ட நிலைமைக்கு ஏற்றவாறு அனுசரித்துச் செயற்படுத்தல் தொடர்பாகவும் தீர்மானித்திருந்தோம்.

நெரிசல் மிக்க நகரப் பகுதிகளில் நெரிசலைக் கட்டுப்படுத்தும் வகையில் சில போக்குவரத்து ஒழுங்குகள், சில மாற்றங்களை பின்பற்றுதல் தொடர்பிலும் ஆலோசிக்கப் பட்டது.

வைத்தியசாலைகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறிப்பாக ஒட்சிசன் நிலைமை தொடர்பில் ஆராயப்பட்டது பெரும்பாலும் யாழ். மாவட்டத்தில் அதாவது வடக்கு மாகாணத்தில் திருப்திகரமாக இருந்தாலும் அதற்குரிய முன்னேற்பாடு நடவடிக்கை எடுப்பதாகவும் கலந்துரையாடப் பட்டது.போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பஸ்கள் ஆசனத்துக்கு அமைய பயணிகள் ஏற்றவேண்டும். இருந்தபோதும் தூர இடங்களுக்கான சேவைகளை அந்த விதத்தில் செயற்படுத்தும்போது சேவைகளை அதிகரிப்பது தொடர்பான ஒரு வேண்டுகோள் இலங்கை போக்குவரத்து சபை, தனியாரிடம் கோரப்பட்டுள்ளது.

அவசர கால நிலைக்கு வடக்கு மாகாணம் தயாராக இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்த விடயம் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

சகல வழிபாட்டு தலங்களிலும் சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்றவாறு ஆலயத்தில் மதகுரு மற்றும் உபயகாரருடன் மக்களின் பங்குபற்றுதல் இன்றி ஆலயச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

திருமண மண்டபங்களை பொறுத்தவரை சில விடயங்கள் கலந்துரையாடப்பட்டு பின்பு ஏற்கனவே தேசிய மட்ட சுகாதார வழிகாட்டல்களுக்கமைய திருமண மண்டபங்களை இயங்கலாம் என்றும், ஆனால் அதற்கு முன்பாக அவர்கள் திருமணத்தில் கலந்துகொள்வோரின் அவருடைய பெயர்ப்பட்டியல் உட்பட பல விவரங்களைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் சமர்ப்பித்து உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், மண்டப உரிமையாளர்கள் அதற்குரிய சுகாதார வழிகாட்டலைப் பின்பற்ற வேண்டும் என்றும், இதனைக் கண்காணிப்பதற்கு பொலிஸ் தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதேபோல சினிமா திரையரங்கு தொடர்பிலும் ஆராயப்பட்டது. யாழ் மாவட்டத்தில் 25 வீத பங்களிப்புடன் சினிமா திரையரங்கைச் செயற்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது – என்றார்.

## பல நெடுந்தூர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி, கொழும்பு கோட்டை – பதுளை, கொழும்பு கோட்டை – கண்டி – கொழும்பு கோட்டை, கொழும்பு கோட்டை – காங்கேசன்துறை – கொழும்பு கோட்டை, கொழும்பு கோட்டை – பொலனறுவை ஆகிய கடுகதி ரயில் சேவைகள் மே 01 முதல் சேவையில் ஈடுபட மாட்டா.

அத்துடன் பதுளை – கொழும்பு கோட்டை, கொழும்பு கோட்டை – பதுளை, பொலனறுவை – கொழும்பு கோட்டை, காங்கேசன்துறை – கொழும்பு கோட்டை, பதுளை – கொழும்பு கோட்டை ஆகிய பிரதேசங்களுக்கான கடுகதி ரயில்கள் நாளை சனிக்கிழமை முதல் சேவையில் ஈடுபட மாட்டா.

எனினும், கொழும்பு கோட்டையிலிருந்து பதுளைக்கான எண் 1015 சொகுசு ரயில் மே மாதம் 08, 14 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு சேவையை முன்னெடுக்கும் எனவும், பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை எண் 1016 ரயில் மே மாதம் 09, 15 ஆகிய திகதிகளில் சேவையில் ஈடுபடும் எனவும் ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, ரயில் எண் 1001/1002 ஆகியவற்றுக்கு முன்பதிவு செய்த பயணிகள் மே மாதம் 01, 02, 08,13, 14 மற்றும் 15 ஆகிய திகதிகளில் கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை வரை ரயில் எண் 1005 , 1006 ஆகியவற்றில் காலை 6.30 மணிக்கு பயணிக்க முடியும் எனவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, தற்போது சேவையில் உள்ள அலுவலக ரயில் நேர அட்டவணையில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை எனவும், அவை வழமை போன்று சேவையில் ஈடுபடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், பொதுமக்கள் தேவையற்ற பயணங்களை முடிந்தளவுக்குத் தவிர்த்துக் கொள்வதுடன், ரயில் நிலையத்துக்குள்ளும், ரயிலுக்குள்ளும் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பொதுப்பயணிகள் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் எனுவும் ரயில்வே திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## மணிவண்ணனால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

அதேநேரம், யாழ். மாநகர சபை மேயர் மணிவண்ணன் மூலமாக இளைஞர்களுக்கு அணிவிக்கப்பட்ட ஆடை தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆடை எனவும், இந்தச் சம்பவம் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது எனவும் அவர் கூறினார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மேயர் என்ற காரணத்துக்காகவோ அல்லது வேறு அதிகாரியாக இருக்கின்ற காரணத்தினாலேயோ இளைஞர்களைப் பயன்படுத்தி அவர்களுக்கு வேறு ஆடைகளை அணிவித்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் செயற்பாடுகளை முன்னெடுப்பது சட்ட விரோதமானது.

குறித்த இளைஞர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆடையே அணிவிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாகவே யாழ். மேயரை உடனடியாகக் கைது செய்து சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை எடுத்தோம்.

அதேபோல, எதிர்காலத்திலும் எவரேனும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் பின்னிற்க மாட்டோம்.

இந்த நாட்டில் வடக்கிலோ அல்லது தெற்கிலோ இளைஞர்கள் மீண்டும் ஒரு கஷ்ட நிலைமையைச் சந்திக்கும் சூழல் உருவாக நாம் இடமளிக்கமாட்டோம்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் தூபியே தவிர, தமிழீழ விடுதலைப்புலிகளை நினைவு கூரும் தூபி அல்ல.

வடக்கிலோ, கிழக்கிலோ பயங்கரவாத அமைப்பை நினைவுகூரும் நினைவுத்தூபிகளை உருவாக்க நாம் இடமளிக்கமாட்டோம் – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் சட்டத்தை மீறிய அதிகாரங்கள் கொழும்பு துறைமுக நகருக்கு செல்கின்றன

## மேற்கு நாடுகளின் தூதுவர்களிடம் சஜித் கவலை

கொழும்பு, ஏப். 30

இலங்கையின் அரசியல் அமைப்பு, நாடாளுமன்ற மற்றும் நீதிமன்ற கட்டமைப்பிற்கு அப்பாலான அதிகாரங்களை கொழும்பு துறைமுக நகருக்கு கொடுப்பதன் மூலமாக நாட்டின் சட்டத்தை மீறிய அதிகாரங்கள் கொழும்பு துறைமுக நகருக்கு வழங்கப்படுகின்றனவா என அச்சம் எழுவதாக சர்வதேச தூதுவர்களுடனான சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தால் கையாளப்பட்ட கொழும்பு துறைமுக நகர் திட்டத்திற்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் தற்போதைய அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சைபி, பிரான்ஸின் தூதுவர் எரிக் லாவெர்ட், இத்தாலியின் தூதுவர் ரீட்டா கியுலியானா மன்னெல்லா, ஜேர்மனியின் தூதுவர் ஹோல்கர் சியூபர்ட், ருமேனியாவின் தூதுவர் விக்டர் சியுஜ்தியா ஆகியோருக்கு இடையிலான முக்கிய சந்திப்பொன்று கடந்த செவ்வாய்க்கிழமை காலை எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

அதேபோல் அன்று மாலையில் அமெரிக்கத் தூதுவர் எலினா பி. டெப்லிட்ஸ், ஆஸ்திரேலிய துணைத் தூதுவர் அமண்டா ஜுவல், சுவிட்ஸர்லாந்து தூதவர் டொமினிக் ஃபர்க்லர், நோர்வே தூதுவர் ட்ரைன் ஜோர்ன்லி மற்றும் கனடா உயர்தூதுவர் டேவிட் மக்கினன் ஆகியோரை எதிர்க்கட்சி தலைவர் சந்தித்திருந்தார்.

தற்போது உலகளாவிய ரீதியில் சகலரும் எதிர்கொள்ளும் கொவிட் -19 வைரஸ் பிரச்சினைகள்,நாடாக இந்த சவால்களில் இருந்து விடுபட சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளல் போன்ற விடயங்களை கலந்துரையாடியிருந்தனர்.

மேலும் தற்போது நாட்டில் ஜனநாயகச் செயற்பாடுகள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டியிருந்தமையுடன் மக்களின் மனித உரிமைகள், சிவில் உரிமைகள், பொருளாதார உரிமைகள், சமூக உரிமைகள், அரசியல் உரிமைகள், சமய உரிமைகள் மற்றும் கலாசார உரிமைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன எனவும், சர்வதேச அழுத்தங்களில் தொடர்ச்சியாக இலங்கை நெருக்கப்பட இதுவே காரணமாக அமைந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் கொள்கை தொடர்பாகவும், ஐரோப்பிய நாடுகளின் சந்தைகளை இலக்கு வைத்து நாட்டின் உற்பத்தி வேலைத்திட்டங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றியும் தூதுவர்களுடன் கலந்துரையாடியிருந்த நிலையில், நாட்டில் அதிகம் பேசப்படும் கொழும்பு துறைமுக நகர் திட்டம் தொடர்பாக சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவருடன் கலந்துரையாடியுள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகர் திட்டத்துக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் தற்போதைய அரசாங்கம் கொழும்பு துறைமுக நகர் திட்டத்துக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது எனவும், கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு என்ற ஒன்றை அமைத்து இலங்கையின் சட்ட முறைமைக்கும், நீதிக் கட்டமைப்பிற்கும், நாடாளுமன்ற நிதி அதிகாரங்களுக்கும் அப்பால் சென்ற அதிகாரங்களை ஆணைக்குழுவிற்கு வழங்கி, துறைமுக நகர் முதலீட்டு வேலைத்திட்டங்கள், அதிகாரக் கட்டமைப்பு என்பவற்றைச் சுயமாக



தீர்மானிக்கும் விதத்திலான நகர்வுகள் முன்னெடுக்கப்படுவதாவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேபோல் நாட்டின் அதிகார எல்லையை மீறிய தீர்மானங்கள் எடுக்கும் சக்தி சீனாவுக்கு வழங்கப்படுவதில் தான் அச்சம் எம்மத்தியில் எழுந்துள்ளதாகவும், இதனை நாடாளுமன்றத்திலும் தாம் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எதிர்க்கட்சி பிரதிநிதிகள் சர்வதேச தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்களிடம் எடுத்துரைத்துள்ளனர் எனச் சந்திப்பில் கலந்து கொண்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எகான் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

# 2 ஆவது டோஸ் ஏற்றும் பணி கிளிநொச்சியில் நேற்று ஆரம்பம்

கிளிநொச்சி, ஏப். 30

கொவிட் 19 தரப்பூசியின் 2 ஆவது ஊசி செலுத்தும் பணிகள் நேற்று ஆரம்பமானது. இரண்டாவது தடுப்பூசி செலுத்தும் முதல் கட்டப் பணிகள் கிளிநொச்சி வைத்தியசாலையில் இடம்பெற்றன.

அதற்கு அமைவாக கிளிநொச்சி வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதியர், சுகாதார ஊழியர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி ஏற்றப்பட்டது.

முதலாவது தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களிற்கு இரண்டாவது தடுப்பூசி முதல்கட்டமாக நேற்று செலுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.






# முகக் கவசம் அணியாதவர்களைத் தேடி பொலிஸூம், இராணுவமும் வலை வீச்சு

## கிளிநொச்சியில் அதிரடி

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சநிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

வீதிகளில் பயணிப்பவர்கள் பொது இடங்களில் கூடுபவர்கள் முகக்கவசம் அணிய வேண்டும் என்பதை வலியுறுத்தி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை தருமபுரம் பொலிஸ்பிரிவில் பல்வேறு பகுதிகளில் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மக்களை முகக் கவசங்களை அணியுமாறும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# அபாய வலயம் தொடர்பான தகவலை உடனே அரசு வெளியிடுதல் வேண்டும்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 30

இலங்கையில் கொவிட் பரவல் அதிகரித்துள்ள ஆபத்தான வலயங்கள் அடையாளப்படுத்தப்பட்ட வரைபடங்களைத் தொற்று நோயியல் பிரிவு உடனடியாக வெளியிட வேண்டும் என அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன் ஊடாக மக்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள முடியும் எனவும், ஆபத்து அதிகமான பிரதேசங்களுக்குச் செல்லும் போது மக்கள் மேலும் அவதானமாகச் செயற்படக் கூடியதாக இருக்கும் எனவும் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே ஊடகங்களிடம் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நாட்டை முடக்குவதற்கான திட்டம் இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ள போதிலும், அதிகரித்து வரும் கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த கடுமையான தனிமைப்படுத்தல் விதிமுறைகளை அமுல்படுத்துவது அவசியமாகும்.

நாட்டில் இதுவரை கொவிட் பரவலில் தீவிரமான அதிகரிப்பு பதிவாகவில்லை. எனினும், நிலைமையைக் குறைத்து மதிப்பிட முடியாது. மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டுமே தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினால் வைரஸ் பரவுவதைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

இந்தநிலையில், கொவிட் பரிசோதனைகளை அதிகரித்துத் தொற்றாளர்களை இனங்காண்பது முக்கியமானது. அத்தோடு அவசர சிகிச்சைப் பிரிவுகள் கொவிட் நோயாளர்களுக்காகத் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும்.

ஏனைய நோயாளர்களைக் கொவிட் நோயாளர்களுடன் இணைத்து சிகிச்சை வழங்க முடியாது. அதேநேரம், அவசர சிகிச்சைப் பிரிவுகளில் படுக்கைகளை அதிகரிக்கவும் தொற்றுநோயியல் பிரிவு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org